போர்வாள்

வாள் 4] 25-11-50 [வீ

பாரத புத்திரர்கள் போர்க்கோலம்!



"ஸ்ரீமான்கள் பக்தவச்சலம், மாதவமேனன், காமராஜர், ம. பொ. சிவஞானம் முதலானவர்கள் திராவிட இயக்கத்தை ஒழிப்பதே இனி எங்கள் வேலை என்று போர்முரசு கொட்டி விட்டனர்."

—பத்திரிகைச் செய்தி.

ஆசிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார். மா. இளஞ்செழியன், B.A. (HONS)

விலை 2

Best copy available.

திக்கெட்டும் ஒலிக்கிறது திராவிட முரசு!

—X—

குன்றத்தூர் கொடுமைகண்டு குமுறுகிறது திராவிடம்!

—(:)—

சென்னை—குன்றத்தூர்—தடியடி — துப்பாக்கிப் பிரயோகக் கொடுமைகளைக் கேள்விப்பட்டு குமுறும் எரிமலைகளாக உருமாறியுள்ளனர் திராவிடர். அவர்களின் கண்டனக் குரலொலிகள் திக்கெட்டிலும் எழுந்தபடி உள்ளன. அவற்றில் சில இங்குத் தரப்பட்டுள்ளன. பிற, பின்!

ஆரணியில் பொதுக்கூட்டம்

17-11-50 அன்று மாலை 6 மணிக்கு ஆரணி நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக தோழர் R. குட்டி அவர்களின் தலைமையின் கீழ் நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வ.ஆ. மாவட்ட செயலாளர் போளூர் K. சுப்ரமண்யம் அவர்களும், ஈ. வே. கி. சம்பத் அவர்களும தற்கால அரசியலும் திராவிடர் இயக்கமும் என்பதைப்பற்றி மிகவும் உணர்ச்சி ததும்பச் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்கு சுமார் 5000 மக்கள் பனியென்றும் பாராமல் திரண்டு இருந்தார்கள். 9-30 மணிக்கு தோழர் அ. ப. நடராசன் அவர்களால் நன்றி கூறப்பட்டு கூட்டம் இனிது முடிவு பெற்றது.

அன்று இரவு சுமார் 10-மணிக்கு மேல்,முன்பு தற்காலிகமாக இருந்த தி. மு. க. நிர்வாகக் குழுவைக் கலைத்து தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் தலைமையிலும், வ.ஆ.மா. செயலாளர் தோழர் கே. சுப்ரமண்யம் அவர்கள் முன்னிலையிலும் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தி. மு. கழகம்

வட சென்னை 4-வது வட்டம்

19-11-50 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்கு சென்னை சோலையப்பன் தெருவு நெ. 112 வீட்டில் சென்னை 4-வது வட்டம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கூட்டம் தோழர் K. M. கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் கீழ்க் கண்டவர்கள் நிர்வாக உறுப்பினர்களாகத் தேர்ந்து எடுக்கப்பட்டனர். செயலாளர்—R பாண்டியன். துணைச்செயலாளர்கள்: C. S. மணி—P. K. மாரியப்பன், பொருளாளர் — A. M. முத்தையா. விளம்பர உறுப்பினர்: தி. தி. மணி. நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்:- சேர்மன்—S. தங்கவேல்—த. சே. அரசு — M. N. சுப்பிரமண்யம்—ச. பெ, தங்கய்யா — P. மணி— K. M. கண்ணபிரான்.

திராவிட முன்னேற்றக் கழகம்

சொக்கநாதபுரம்,

விகிர்தி ஆண்டு ஐப்பசித் திங்கள் 20-ம் நாள் மாலை 4-மணிக்கு இவ்வூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் தோழர் கரு. சேதுராமன் தலைமையில் கூடி, டில்லி மந்திரி-ராஜாஜி 24-10-52ல சென்னை வந்த பொழுது—அன்னாருக்கு கருப்புக் கொடி காட்டவந்த நம் கழகத் தோழர்களையும், பொது மக்களையும்—யாதொரு காரணமுமில்லாமல், ஈவு, இரக்கமின்றி நூற்றுக் கணக்கான மக்களைக் காயப்படுத்தியதையும், 68 தோழர்களைக் கைது செய்ததையும், 34 பேர் மீது வழக்குத் தொடுத்திருப்பதையும்—குன்றத்தூரிலே 144ஐ மீறச் சென்ற "திராவிடன்" ஆசிரியர் என். வி. நடராசனைக் கைது செய்ததையும், வன்மையாகக் கண்டித்தது.

ஆர்க்காடு தி. மு. க. கிளை

1-11-50ல் தோழர் முனிக்கண்ணு தையல் அலுவலகத்தில் செயற்குழு கூடி,

(1) 21-10-50ல் நடந்த பொதுக் கூட்டத்தின் வரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு, அதிகப்படி செலவை வசூல் செய்து நேர் செய்வதென முடிவு செய்யப்பட்டு,

(2) 24-10-50 சென்னையிலும், 26-10-50 குன்றத்தூரிலும் சென்னை சர்க்கார் கண்மூடித்தனமாக மக்களை விரட்டி தடியால் அடித்து, துப்பாக்கியால் சுட்டு துன்புறுத்தியது வன்மையாகக் கண்டிக்கப்பட்டது.

பறங்கிப்பேட்டை தி மு. க. கிளை

தென்னார்காடு ஜில்லா. பறங்கிப் பேட்டையில் 30-10-50ல் திராவிட முன்னேற்றக் கழகத் தொடக்க விழா தோழர் ப. மா. இரத்தினவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நெடுஞ்செழியன் M A, K.A. மதியழகன் B.A. ஆகியோர் தற்கால அரசியல் நிலை — அடக்குமுறை ஆகியவைபற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

மாயவரம் தி. மு. க. கிளை

31-10-50-ல் நடைபெற்ற கமிட்டி கூட்டத்தில் சென்னை தடியடிப் பிரயோகம், குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகம் இவைகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றி முதன்மந்திரிக்குக் தந்திமூலம் அனுப்பப்பட்டது.

அழகிரி அறிவு மன்றம்

காஞ்சிபுரம்.

காஞ்சீபுரம் கரிக்கினிலமர்ந்தவள் கோவில் தெருவில் அழகிரி அறிவுமன்றம் (தி. மு. க. கிளை.) துவக்க விழா 5-11-50-ல் நடந்தது. அது சமயம் தோழர்கள் E. V. K. சம்பத், C. V. M. அண்ணாமலை, இராம. அரங்கண்ணல், V. சம்பந்தம் முதலியவர்கள் இன்றைய அரசியல் நிலைபற்றிப் பேசினார்கள். தோழர். S. ஆனந்தம் தலைமை வகித்தார்.

அழகிரி நூல் நிலைய அமைப்பு நிதிக் கூட்டம்

5-11-50 ஞாயிற்றுக் கிழமை காலை 10-மணிக்கு மயிலப்பூர் செந்தோம் மாதாகோயில் அருகில்

(4-ம் பக்கம் பார்க்க)

மாகாணத்திற்கு மாகாணம், பிளவு! அழிவு! தோல்வி!

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

வாராதே — எட்டி நில்!'' என்கிறார், ஸ்ரீஜத் பிய்யானி! இவ்விரு தலைவர்களின் ஓயாத போராட்டத்தின் முடிவு? சொல்லவா வேண்டும், காங்கிரஸ், அங்கே வாழ்விழந்த வனிதையாகிவிட்டது!

*　　*　　*　　*

ராஜஸ்தான் மாகாணத்தில், ஹீராலால் சாஸ்த்ரி மாகாண காங்கிரஸ் சார்பில் முதலமைச்சர்! ஸ்ரீமான் வியாஸ், மாகாண காங்கிரசின் கட்சித் தலைவர்! பலமான போராட்டம் இருவருக்குமிடையே நடந்துகொண்டிருக்கிறது! வெற்றி தோல்வி யாருக்கு?—அது அல்ல பிரச்சினை. இருவருக்குமிடையே சளையாத போர் நடந்துகொண்டிருக்கும்போது, காங்கிரஸ் இதுதான் தக்க தருணமென்று அந்த மாகாணத்தைவிட்டே மெள்ள நழுவிவிட்டது.

*　　*　　*　　*

பம்பாய் மாகாணம், ஒரு காலத்தில் காங்கிரஸ் கோட்டையென்று புகழப்பட்ட பூமி! ஆனால் இப்போதோ, அங்கு நடைபெறுகிற ஒவ்வொரு தேர்தலிலும், காங்கிரஸ், தோல்வி அணங்கையே திருமணம் புரிந்துவருகிறது. வெற்றி எனும் வேல் விழியாளோ காககிரஸ் கட்சியை உதறித்தள்ளிவிட்டு, ஜெயப்பிரகாஷர் கட்சியுடன் சரச சல்லாபம் புரியத் தொடங்கிவிட்டாள்!

*　　*　　*　　*

மைசூரிலே, காங்கிரசிற்குள் இரண்டு கட்சி! **ஐதராபாத்திலும்**, அதே வேதனைக்கீதம்தான்! மைசூர், ஐதராபாத், இரண்டு வட்டாரங்களிலும் உள்ள காங்கிரஸ் பட்டாளத்தினர்க்கு ஒற்றுமை உபதேசம் புரிந்துபார்க்காமலில்லை எஃகுமனிதர் சர்தார் பட்டேல்! ஆனால் உபதேசம் பலிக்கவில்லை! பலிக்கிற காலமா இது!

*　　*　　*　　*

கன்னட மாகாணத்தில், காங்கிரஸ்கட்சி, அகில இந்திய காங்கிரசை எதிர்த்து, அண்மையில் புரட்சிக்கொடி உயர்த்தியதை, இதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. "கன்னடத்தனி மாகாணம், நம்முடைய நெடு நாள் இலட்சியக் கனவு-அந்தக் கனவை நனவாக்கத் தவறிவிட்டது அகில இந்திய காங்கிரஸ்—ஆகவே விலகுங்கள் அந்த இயக்கத்தைவிட்டு—ஆண்மையாளர்கள் அதில் இனி இருக்கக் கூடாது'' என்று கன்னட மாகாண காங்கிரஸ், டில்லியிலும் சென்னையிலும் உள்ள கன்னட எம். எல். ஏ. க்களுக்குத் தாக்கீது விடுத்ததும், அந்த அன்புக் கட்டளைக்கிணங்கி, பற்பல கன்னட எம். எல். ஏ. க்கள் சட்டசபை காங்கிரசை, விட்டுத் தொலைத்து வெளியேறியதும், பண்டைப் பழங்காலத்துக் கதைகள் அல்ல—சில மாதங்கட்குமுன் நடந்த அரசியல் புரட்சிகள்.

*　　*　　*　　*

கன்னடப் பிரதேச காங்கிரசைவிட சற்று வேகமாகவே மரணப்பாதையில் பயணம் புரிந்துகொண்டிருக்கிறது ஆந்திரா காங்கிரஸ். இங்கே காங்கிரசுக்குள் ஐந்து கட்சிகள். பிரகாசம் ஒரு கட்சிக்குத் தலைவர்! பேராசிரியர் ரங்கா இன்னொரு கட்சியின் ஆதீனகர்த்தா! காளா வெங்கட்ராவ், மூன்றாவது கட்சியின் மூலவர்! பட்டாபி சீத்தாராமய்யா நாலாவது கட்சியின் நடுநாயகம்! அமைச்சர் பீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் கோபால ரெட்டியார்களும் அவர்கள் தம் தோழர்களும் வேறோர் கட்சி! இப்படியாக ஒரு பஞ்சாங்கமாக (பஞ்ச அங்கமாக) இருக்கிறது காங்கிரஸ், ஆந்திர நாட்டில்! ஆத்திரமின்றிப் பார்ப்பவர்கட்கு, காங்கிரஸ், இனி அதிக நாட்களுக்கு வாழாது ஆந்திராவில் என்னும் உண்மை, வெள்ளிடை மலையென விளங்காமற் போகாது.

ஆந்திர காங்கிரசிற்குள் ஏற்பட்டுவிட்ட இந்த ஐந்து நோய்களின் காரணமாக 'காங்கிரஸ் தேர்தல்' என்னும் உணவை உட்கொள்ளவே முடியவில்லை அந்தக் காங்கிரசால்! ஆம் ஆம்! அங்கே இந்த ஆண்டு நடைபெற்றிருக்க வேண்டிய காங்கிரஸ் தேர்தல்கள் இன்றளவும் நடைபெறாமல் தான் இருக்கின்றன! இனியும் விரைவில் நடைபெறக்கூடும் என்பதற்கான ஆதாரமோ ஒன்று கூட நம் கண்கட்குத் தென்படவில்லை.

சிற்றூர், நகரம், மாவட்டம், மாகாணம் என்றுள்ள காங்கிரஸ் கட்சியின் எந்தக் கிளைக் கழகத்திற்குமே ஆந்திராவில் தேர்தல் நடத்தமுடியவில்லையாம்! எல்லாம் ஒரே குழப்பமயமாக இருக்கிறதாம்! துணிந்து எங்காவது தேர்தல் நடத்தத் தொடங்கினால், ஓட்டுகள் பதிவாவதில்லையாம்! ஒரு கோஷ்டி காங்கிரஸ்வாதிகளின் கன்னங்களில் மற்றொரு கோஷ்டி காங்கிரஸ்வாதிகளின் கரங்கள்தான் பதிவாகின்றனவாம்! இப்படியெல்லாம் கூறி ஆந்திர நாட்டுக் காங்கிரசின் மீது அழிக்கமுடியாத மாசினைப் படரவைத்திருப்பது நாமல்ல—**பட்டீல்**! அகில இந்திய காங்கிரசால், ஆந்திர நாட்டுச் சிக்கலைத் தீர்த்து வருக என ஆணையிட்டு அனுப்பப் பட்டவர்! அவர்தான் அளித்திருக்கிறார் ஆந்திர நாட்டுக் காங்கிரஸ் பற்றிய இந்த அருமையான ஓவியத்தை! இந்த ஓவியம் தவறாகத் தீட்டப்பட்ட சித்திரமாகவோ, வேண்டுமென்றே செய்யப்பட்ட விஷயமாகவோ

(6-ம் பக்கம் பார்க்க)

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பாரீஷ் மண்டபத்தில் பன்மொழிப் புலவர் க. அப்பாதுரை அவர்கள் தலைமையில் அழகிரி நூல் நிலைய அமைப்பு நிதிக்காக கூட்டம் நடைபெற்றது. அறிஞர் அண்ணு அவர்களும், T. K. சீனிவாசன், அவர்களும் "இருளிலிருந்து ஒளியை நோக்கி" என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றினுர்கள்.

தி மு. கழகம் 3-வது வட்டம்

வடசென்னை

12-11-50 இரவு 11 மணிக்கு P. இராமசாமி இல்லத்தில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில் கீழ்க்கண்டபடி தீர்மானித்திருக்கிறது.

(1) புதிய நிர்வாகஸ்தர்களாக செயலாளர்: P.V. முத்துச்சாமி S.P T. திராவிடமணியும், பொக்கிஷதார்: M. சுப்பிரமணியமும் விளம்பர உறுப்பினர்: N, கிருஷ்ணனும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2) ஆச்சாரியார் சென்னை வரும்போது கருப்புக்கொடி காட்ட வந்த இயக்கத் தோழர்கள் மீதும் பொது மக்கள்மீதும் அரசியலார் தடியடி செய்தும், மறுநாள் குன்றத்தூரில் 144 உத்திரவைக் கண்டிக்கவேண்டி நேர்மையான முறையில் கூட்டம் நடத்தவந்த இயக்கத் தோழர்களை கடுமையான தடியடிப் பிரயோகம் செய்தும் 8 தடவை காட்டுமிராண்டித் தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை வன்மையாகக் கண்டிப்பதுடன் பகிரங்க விசாரணை நடத்துமாறு சென்னை ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொள்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம்

பெங்களூர் அக்கிப்பேட்டை

ஞாயிறு காலை 10-மணிக்கு (5-11-50) கழக கட்டிடத்தில் "திராவிட முன்னேற்ற கழக" பொதுக்குழுக்கூட்டம் தோழர் மு. அரங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆண்டின் வரவு செலவு கணக்குகள் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு கடந்த ஆண்டில் பணியாற்றிய நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளப்பட்டு புது ஆண்டுக்குக் கீழ்க்கண்ட குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(1) செயலாளர்: வே. இளஞ்சேரன். (2) துணை. செ:—பெ. வ. பொன்னுரங்கம். (3) பொ. உ. வே. அ. தாமோதரம். (4) வி. உ. எம். வீ. முனிசாமி.

"செயற்குழுவினர்கள்"

(1) மா. மன்னர். (2) டி. ஏ. துரைசாமி. (3) மா. பா. செல்வம். (4) மு. அரங்கசாமி. (5) மு. வெ. செகந்நாதன்.

24, 26-10-50, ஆகிய தேதிகளில் சென்னையிலும், குன்றத்தூரிலும் நடந்த தடியடிப் பிரயோகத்தையும், துப்பாக்கிப் பிரயோகத்தையும் கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியது.

திராவிட மாணவ முன்னேற்றக் கழகம்

சங்கரநயினர்கோவில்

20-11-50-ல், இங்கு திராவிட மாணவ முன்னேற்றக் கழகக் கூட்டம், தோழர். இரா. பழனிவேலு தலைமையில் கூடி, தோழர்கள் க- சங்கரநாராயணன், மு. ஆறுமுகம். க. தளவாய். நகர தி. மு. கழகச் செயலாளர். டி. ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் கழகக் கொள்கைகள்பற்றி விரிவாகப் பேசிய பிறகு, சென்னைத் தடியடிப் பிரயோகத்தையும், குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோகத்தையும் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

நண்பர்களிடம் பலவாறுகக் கொடுத்து, சந்தேகம் ஏற்படாதபடி செய்வாணும் காவலாளி கோலினஸ்கி. அவர் தூக்குமேடையில் உயிர் துறந்த பின், அவரது மனைவி அகஸ்டினு அவைகளையெல்லாம் திரட்டி ஏடாக நாட்டுக்குத் தந்திருக்கிறுர்! தூக்குமேடை ஏறப்போகும் தருணத்தில், இலட்சியவாதி, செயல் வீரன் இசைக்கும் இருதய கீதத்தை அந்த ஏட்டிலே கேட்க முடியும்.

"அதோ அந்த நடுக்கத்தோடு கூடிய விதை விதைப்பிலிருந்து எத்தகையதோர் விளைச்சல் விளையப்போகிறது" (Oh, What a crop will rise one day from that frightful seeding) என்று, புதிய சமுதாய வருகையைக் குறிப்பிடும்போது கூறுகிறுர்! அவரது வாழ்க்கையிலேயே அவர் எழுதிய இறுதி வரிகளைப் பாருங்கள்:

எச்சரிக்கையாயிருங்கள். (Be on Guard) உண்மையான வாழ்க்கையில பார்வையாளர்களே இல்லை. வாழ்வில் எல்லோரும் பங்கெடுத்துக் கொள்கிறீர்கள். (In real life, there are no spectators; you all participate in life) கடைசிக் களத்திலே, திரை எழுகிறது (The curtain rises on the last act) உங்கள் அனைவரையும் நான் நேசித்தேன்! தோழர்களே! (I loved you all friends)

இருதயத்திலிருந்து குமுறி வருகிற சொற்கள் இப்படித்தானிருக்கும். திராவிட நாட்டுக்கு, பல ஜூலியஸ் பியூசிக்குகள் இன்று உடனடித் தேவை!

செந்தமிழ் நூல்கள்

	ரூ.	அ.
தமிழர் சரித்திரம்	3	0
பழந்தமிழர்	2	0
செந்தமிழ் அகராதி	4	0
மரணத்தின் பின்	1	0
தமிழர் நாடு	0	8
மனிதன் எப்படித் தோன்றினுன்	0	8
அறிவுரை மாலை	0	12
திராவிட இந்தியா	1	0
பத்துப் பாட்டு உரைநடை	1	8
1500 கேள்விகளும் விடைகளும்	1	4
விதிவழியே (நாவல்)	2	4
தமிழரிடையே அன்புப் போர்	1	0
பேச்சுக்கலை	1	0
வீரத்தமிழருக்கு ஆவேசக் கடிதங்கள்	1	6
பெண்களுக்குச் சம உரிமை (கல்லூரி மாணவிகள்)	0	10
துடிப்புள்ள இளைஞன்	0	4

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, சென்னை.

இன்பத் திராவிடத்தின் இருதய கீதங்கள்!

★  ★

இருவாரக் கடுங்காவல் அநுபவித்த இலட்சியபுருஷர்கள்!

சென்னைக்கு, வடநாட்டு ஆதிபத்யத் தூதுவர் அன்பர் ஆச்சாரியார் வந்தபோது, கருப்புக் கொடி காட்டி அவரிடம் திராவிட உலகுக்குள்ள அதிருப்தியைத் தெரிவிக்க முயன்ற "மாபெரும் குற்றத்' திற்காக இரண்டு வாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்று, அந்தத் தண்டனை முழுவதையும் இலட்சியவாதிக்குத் தரப்படும் இன்பப் பரிசாக எண்ணி இன்முகத்துடன் அநுபவித்துவிட்டு வெளிவந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞரேறுகள்.

உட்காரந்திருப்பவர்கள்:—[இடமிருந்து வலம்]—1. பரமசிவம். (2) B. வடிவேலு 3. K. T. S. மணி, 4. மகாதேவன், 5. அழகரசு, 6. கஜபதி.

நிற்பவர்கள் முதல் வரிசை:—[இடமிருந்து வலம்]—1. K. ராஜு, 2. T. K. கபாலி 3. லோகநாதன், 4. சம்பந்தன், 5. கன்னியப்பன், 6. வடமலை, 7. பால கதிரவன்.

நிற்பவர்கள் பின் வரிசை:—[இடமிருந்து வலம்]—1. K. ஜயராமன், 2. தங்கலிங்கம் 3. ராதாகிருஷ்ணன், 4. அப்துல் அமீது கான், 5. K. V. K. சாமி.

ஓமந்தூரார், தமிழகத்தில், உருவாக்கிறாராம், புதுக் கட்சி!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க முடியாது! ஏனெனில் இந்த அற்புத ஓவியத்தை உருவாக்கியிருக்கும் "உத்தமர்" பட்டேல், தான் பிறந்த பூமியாகிய பம்பாயில் இருந்தபடியே இந்த உன்னத காரியத்தைச் செய்து முடித்து விடவில்லை. சிரமத்தைப் பாராது ரயிலேறிவந்து, ஆந்திர பூமியில் பற்பல நாட்கள் தங்கி, பல்வேறு கோஷ்டியினரையும் தனித்தனியே கண்டு, நிலைமையை நேரிடையாக நன்முறையில் ஆய்ந்து பார்த்த பிறகுதான் தயாரிக்கப் பட்டிருக்கிறது இந்த உன்னத ஓவியம்.

ஆந்திரா காங்கிரசின் அலங்கோல நிலையை அழகான மொழிகளிலே அருமையாகக் கூறியதோடு, ஆஹா இதுபோதும்! என் கடன் தீர்ந்து விட்டது! என்று மன அமைதிபெற்று ஓய்வு கொள்ளத் தொடங்கிவிடவில்லை தோழர் பட்டேல்! அகில இந்திய காங்கிரஸ் கட்சிமூலம் ஆந்திர காங்கிரஸ் கமிட்டியையே கலைத்துவிட்டு, அதன் சொத்துக்கள் அவ்வளவையும் தன் கையிலே ஒப்படைக்கும்படி செய்துவிட்டார் ஸ்ரீமத்பட்டேல்!

* * *

மலையாளப் பகுதியிலும், காங்கிரஸ் இரண்டு மூன்று குழுக்களாகப் பிரிந்து பிளவுண்டுதான் கிடக்கிறது. திருவாங்கூர் சிற்றரசில் முதலமைச்சராக இருந்தவரும், நீண்ட நாள் காங்கிரஸ் தலைவருமாகிய பட்டம் தாணுப்பிள்ளை, ஏராளமான பொதுமக்கள் பின் தொடர, மலையாள காங்கிரசைவிட்டு வெளியேறி, **ஜனநாயக சமதர்மக் கட்சி** என்ற பெயரில் ஒரு புதுக்கட்சியை அமைத்து, காங்கிரஸ் கொடுமைகளை அம்பலப் படுத்தி வருகிறார். அதுபோலவே, மலையாள காங்கிரசின் மாணிக்கம் எனப் புகழப்பட்ட, பழம்பெருந் தலைவர் தோழர் கேளப்பனும், மலையாள மாகாண காங்கிரஸ் தலைவர் பதவியைத் துச்சமென உதறி எறிந்துவிட்டு, இச்சையில்லை இனி இந்த நச்சுப் பொய்கையில் குளித்திட என்று கூறி, அச்சமின்றி வெளியேறி, விடுதலை வீரராகப் பவனிவருகிறார்.

கடைசியாக இருப்பது, தமிழகம்! தமிழகமோ, திராவிட இயக்கத்தின் சொந்த சொத்து—எனவே, இங்கே காங்கிரஸ், எப்போதுமே அதிகமாகத் தன் கடையை விரிக்க முடிந்ததில்லை.

இப்போதோ, புதுச்சேதி ஒன்று, கிடைத்திருக்கிறது நமக்கு! உத்தம சீலர் என்று நித்தமும் புகழப் படும் **ஓமந்தூர் இராமசாமியார்**, விரைவிலே, தமிழ் நாட்டுக் காங்கிரசிற்குள்ளாக, ஒழுக்கத்தையும் நாணயத்தையும் நிலைநாட்ட புதுக் கட்சி ஒன்று தொடங்க இருக்கிறாராம். வேறு

கிருபலானியாக மாற இருக்கிறாராம்! அதிகம் சொல்வானேன்? காங்கிரஸ், தமிழகத்திலும், தனக்குத்தானே சவக்குழி தோண்டிக் கொள்ளும் திருப்பணியைத் தொடங்கிவிட்டது! ஆம், அவ்வளவு சொன்னால் போதும்!

* * * *

* உத்தரப் பிரதேசத்தில் மரணநிலை!

* பாஞ்சால மாகாணத்தில் பரிதாபக் கதை!

* வங்காளப் பகுதியில், 'இப்பவோ பின்னையோ!'

* சீக்கிய வட்டாரத்தில் பலமான எதிர்ப்பு!

* பம்பாய் மாகாணத்தில் மகத்தான தோல்வி!

* ஐக்கிய மாகாணத்தில் அழிவுப் படலம்!

* பீரார் வட்டாரத்தில் குத்தும் வெட்டும்!

* இராஜஸ்தான் கோட்டையில் சரிந்துவிழும் சகாப்தம்!

* விந்தியப் பிரதேசத்தில் அந்திய காலம்!

* கன்னட நாட்டில் சின்னாபின்னம்!

* தெலுங்குப் பூமியில் தீராத வியாதி!

* மலையாள மண்டலத்தில் மண்டைக் குடைச்சல்!

* தமிழ்த்திரு நாட்டிலோ, தலைகாட்ட ஒட்டாத திராவிடப் புயல்!

* அகில இந்தியாவிலுமோ சம்மட்டி அடி தரும் காங்கிரஸ் ஜனநாயக முன்னணி.

* அது போதாதென்று, கல்கத்தாவில், காங்கிரசிற்கு சவக்குழி தோண்ட ஒரு கிரிஷக் பிரஜா மஜ்தூர் கட்சி!

ஆம்—ஆம்—இத்தனையும் அகில இந்திய காங்கிரஸ் மீது எத்தனையோ திசைகளிலிருந்து வீசப்படும் வெடிகுண்டுகள்தான்! சந்தேகமில்லை! சந்தேகமில்லை! அதோ பாருங்கள்—அகில இந்திய காங்கிரஸ் கோட்டை சடசடனச் சரிந்து வீழும் காட்சியை! வெடிகுண்டுகள் வேலை செய்யத் தொடங்கிவிட்டன! கோட்டை, சரியத் தொடங்கிவிட்டது! கொடுமை, அழிய ஆரம்பித்து விட்டது! மமதை, மடிய முனைந்துவிட்டது! அக்கிரமம், அநீதி, ஆணவம், அறியாமை, மக்களை மதியா மதோன்மத்தத்தனம்—அத்தனையும், அதோ, தூள் தூளாகச் சிதறிச் சின்னாபின்னமடைந்து, காற்றிலேயெல்லாம் கலந்து பறக்கத் தொடங்கிவிட்டது!

மடிகிறது—மடிகிறது—சர்வாதிகாரம்.

அழிகிறது—அழிகிறது—காங்கிரஸ் கோட்டை

ஒழிகிறது—ஒழிகிறது—பழமைப் பித்து!

தொலைகிறது—தொலைகிறது—முதலாளித்வம்!

* * * *

காங்கிரஸ் கோட்டையே! காங்கிரஸ் கோட்டையே! உன் முடிவு இதுதானா?.........

மாவீரன் இயற்றிய மகத்தான புத்தகம்!

—★—

பாரத ஏடன்று—பொதுவுடமைப் பரணி!

—★—

விடுதலை வீரர்கட்கோர் விடிவெள்ளி!

★

சி. ஜெனார்த்தனன்

எழுத்து, புத்துலகச் சிற்பிகளை அவனிக்கு அறிமுகப்படுத்தும் பாசறை. பேனாமுனை, புத்துலகச் சமுதாயத்தை உருவாக்குவதற்கு உலை வைக்கும் உலுத்தர்களை உதிரியாக்கும் ஈட்டிமுனை. சமுதாயம், கல்லும் முள்ளும் கலந்து கிடக்கும் காட்டுப் பாதை. சிந்தனைச் சிற்பிகளின் கருத்தோவியங்கள், காட்டுப் பாதையிலே காணப்படும் காளான்களைக் கல்லியெறியும் போர்வாள்கள். கத்தி முனை, சாம்ராஜ்யாதிபதிகளாக்கிஇருக்கிறது சாமானியர்களை! ஈட்டிமுனை, மக்களின் இதயங்களிலிருந்து சாவோலத்தைத் தூண்டுவதன் மூலம், அவர்களது கண்களிலிருந்து இரத்தக் கண்ணீரைச் சிந்த வைத்ததன் மூலம், மன்னர்கள் பலரின் வெண்குடை நிழலை விரிவுபடுத்திப் படர வைத்திருக்கிறது. ஆனால் பேனாமுனை மக்களின இதயச் சங்கிலிருந்து இலட்சிய கீதத்தைத் தூண்டுவதன் மூலம், தனது கருத்துக்களை மக்களது மனப்பாங்கிலே மலரவைத்து, அறிவை அலரவைத்திருக்கிறது. நான் ஈட்டி முனைக்கல்ல, பேனா முனைக்கு அஞ்சுகிறேன் என்று நெப்போலியன் கூறியதற்குக் காரணம், பேனா, ஜன சக்தியைத் திரட்டி ஜனநாயக முன்னணியை உருவாக்கும் ஆயுதம் என்பதுதான்.

மக்கள் சக்தியைத் திரட்டுவதன் மூலம், மத அபிமானத்தின் மூலம் அல்ல, புதியதொரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு, சிந்தனைச் சிற்பிகள் உறுதுணையானவர்கள். பஜகோவிந்தம் பாடியல்ல, பகுத்தறிவுப் பாசுரத்தைப் பாடித்தான், பரவியிருக்கும் இருட்டைப் போக்கும் பகலவன்களாயினர், அவர்கள். இந்நாடு எந்நாடு, இது நந்நாடு,இதைப்பொன்னாடாக்குவதே, எங்கள் இலட்சியம், என்று கூறி விடுதலைப் பாதையிலே செயல் வீரர்கள் செல்லும்போது, அவர்களுக்கு வழி மயக்கமும் வெங்கொடுமையும் தாக்காதிருக்க, போர்ப்பரணி அமைத்து அளிப்பவர்கள்தான், எழுத்தாளர்கள்.

பிரான்சிலே வால்டேரை, எமிலிஜோலாவை, பிரிட்டனிலே எச். ஜி. வெல்ஸை, பெர்னார்ட்ஷாவை, ருஷ்யாவிலே டால்ஸ்டாயை, மாயாக்கிவாஸ்கியை, மாக்சிம் கார்க்கியை, திராவிடத்திலே பாரதிதாசனை, அண்ணாதுரையை இப் பகுத்தறிவாளர் பட்டியலிலே சேர்க்கலாம். மமதையாளர்களல்ல, மங்கை பாகனின் அடியார்களல்ல, மக்கள் விடுதலைக்கான பரணியின் பீலிச் சிதறல்கள் இவர்கள். வாழ்வு சிறிது, நாடு பெரிது, என்ற இலட்சியப் பாதையில் நடந்து, வெட்டிப் பேச்சல்ல எங்களுடையது வேதனையின் குமுறல் என்று ஏட்டுப் பாதையின் மூலம் காட்டுப் பாதையை நாட்டுப் பாதையாக்கியவர்கள். அவர்களிலே வரலாற்றால் என்றும் மறக்கமுடியாதபெயர் ஜுலியஸ் பியூசிக் செக்கோஸ்லவக்கியா நாட்டின் விடுதலைப் போரிலே, எழுத்தால், பேச்சால், சொல்லால், செயலால் ஈடுபட்டுப் போராடியதன் மூலம் தூக்கு மேடை ஏறியவர் ஜுலியஸ் பியூசிக். அவரைப்பற்றி சில பல செய்திகள் அறிந்து கொள்வது, திராவிட நாட்டின் விடுதலைப் போரிலே எழுத்தால, பேச்சால், சொல்லால், செயலால் ஈடுபட்டு, ராமராஜ்யத்தின் அடக்குமுறை தர்பாரை அனுபவித்து வரும் நமக்கு, காரிருளிலே கதிரவனைப்போல, உள்ள உடைவை ஓட்டி, உற்சாகத்தைக் கூட்டும் என்பது உறுதி.

இன்று சிவப்பாகிவிட்ட செக்கோ, மக்கள் அரசாங்கத்தை செங்கொடியின் கீழ் அமைத்து மறுமலர்ச்சி பெற்றுவிட்ட செக்கோ, வறண்ட பாலைவனமாக, சுரண்டப்பட்ட காடாக இருந்தது, எப்போதோ கூட அல்ல, சில ஆண்டுகளுக்கு முன்பு, அண்மையில் நடைபெற்ற உலகப்போரின் போது!

1950-ல் செக்கோ, பசுஞ்சோலை, பொதுஉடமை வானத்தின் கீழ்! 1943-ல் செக்கோ, பாலைவனம். குதமதியானின்

எக்காளமும், நல்லறிவாளரின் ஏக்கமும், செக்கோஸ்லவிக்கியா எங்கும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. இன்று திராவிடத்தின் நிலை, அன்று செக்கோவின் நிலையாயிருந்தது. எழுத்துச் சிற்பிகளைச் சிறைக்கோட்டத்துக்கு அனுப்பி, இன்றைய ராமராஜ்யம் அவர்களை மொட்டை அடிக்கிறதல்லவா? எங்கள் மண்டையிலே ஒன்றுமில்லை, அதனால் உங்கள் மண்டையிலும், கிராப் கூட இருக்கக் கூடாது என்று கூறுவதுபோல், எழுத்தாளர்களை மொட்டையடித்து தங்கள் அறிவுச் சூன்யத்தை இன்றைய ஆட்சியாளர் தப்பட்டை அடித்து அவனிக்கு அறிவிக்கிறார்கள் அல்லவா? டில்லி ஏகாதிபத்ய தேவதையின் ஒரு மோகனப் புன்னகைக்காக நம்மை இவ்வாறு நசுக்கி, நரபலி கேட்கிறார்கள் அல்லவா? அதே போல், செக்கோவிலேயும், 1943-ல் எழுத்துரிமை, பேச்சுரிமை, பிரச்சார உரிமை, ஆகிய உரிமைகளை யெல்லாம் குழி தோண்டிப் புதைத்திருந்தார்கள், கருத்துக் குருடர்கள்!

அறிஞர் ஜூலியஸ், 'ரூட் பிராவோ' (Rude Pravo) என்ற வெளியீட்டின் மூலம், செக்கோ மக்களின் இதய கீதம் ஆனார். அவருடைய பேனா முனை சிந்திய கருத்துக்கள், மமதையாளருக்குக் கனலாகக் காணப்பட்டது. அவரது எழுத்தோவியங்கள், செக்கோ மக்களின் அன்னிய ஏகாதிபத்ய அழிப்புப் போருக்கு அளித்த ஆக்கம், பிற்போக்கு யாத்திரீகர்களின் அருவருப்பைத் தூண்டியது. 1942 ஏப்ரல் 24-ந் தேதி செக்கோவில் நாடாண்ட, ராமராஜ்யத்தின் மறு மதிப்பு, அவரைச் சிறைக் கோட்டத்துக்கு அனுப்பியது. ஆதிபத்யம் செலுத்திய நாஜி வெறியர்கள் நாட்டு விடுதலைப் பட்டாளத்தை நரபலியால் நசுக்க முயற்சித்தார்கள். கூட்டாளிகளைக் காட்டிக்கொடு, என்று கட்டாயப்படுத்தினர் காட்டு மிராண்டி உள்ளத்தினர் கருத்துச் சிற்பி ஜூலியஸை. மறுத்தார். மறுத்தது மட்டுமல்ல, 1943, செப்டம்பர் 8-ந் தேதி, தூக்குமேடை ஏறினார். இல்லை! ஏற்றப்பட்டார் எத்தர்களால்!

ராமராஜ்யமாவது மொட்டை அடிக்கிறது; மண் வெட்டச் செய்கிறது; விடுதலை விளக்கேந்திகளுக்கு சோளக் கஞ்சியைத் தருகிறது; ஆனால் செக்கோவிலே கெஸ்டாபோ என்ற மிருகப் போலீஸ் வர்க்கம், 411 நாட்கள், சிறையிலே, சிந்தனையாளர் ஜூலியஸைச் சித்திரவதை செய்து, மூர்ச்சை அடையும் வரையில் அடித்து உடலைச் சின்னாபின்னப் படுத்தி, உணவளிக்காது உடலை உருக்கி, கோரத் தாண்டவமாடியது.

ஆனால் அந்த சித்திரவதையின் சூழ்நிலையிலே, வேதனையின் வலையிலே, ஜூலியஸ் பியூசிக் எழுதினார்! உலக மக்கள் வரலாறு என்றுமே மறக்க முடியாத, சிரஞ்சீவித்துவம் பெறப் போகிற, மக்கள் இலக்கியத்தை, சிருஷ்டித்தார்! இயற்றினார், இராமாயணமல்ல, இலட்சியப் பாதையின் விளக்கம். பாரதமல்ல, பொது உடமைப் பரணி. அதுதான் "தூக்குமேடைக் குறிப்புகள்" [Notes from the Gallows]

மனித உணர்ச்சியின் திரிபுகளை, பண்புகளை, தன்மைகளை மட்டுமல்ல, கொடுங்கோன்மைக்கு மனித வர்க்கம் விடுகிற சவாலை எழுத்தாக்கி இருக்கிறார். விடுதலைப் போரை நடத்துபவர்களுக்கு, அது, விடிவெள்ளி. போரிலே விரைவில் சோர்வடைந்துவிடும் பண்பு படைத்தோருக்கு, அது, சிவப்பு விளக்கு. திராவிட இளைஞர்களும் மாணவ மணிகளும் அவசியம் அந்தப் போர் வாளிலேத் தங்கள் சிந்தனைக் கத்திகளைத் தீட்டிக்கொள்ள வேண்டுவ என்று விரும்புகிறேன்.

அது ஒரு நாடகம், ஆனால் நாட்டு நடப்பின் சித்திரம். அது ஒரு சினிமா—வாழ்க்கை மேடையிலே உயிரோவிய நாடக சபைகள் நாடோறும் அரங்கேற்றுகிற சினிமா! பிரேக் நகரிலே, பேன்கிராட்ஸ் சிறையிலே, நாஜிகளின் துப்பாக்கி முனைகளுக்கு எதிரே, அவர் அதை உருவாக்கினார். சில காகிதங்களில் அவர் எழுதிக்கொண்டிருப்பாராம். திடீரென்று காவலாளிகளின் வருகை சப்தம் கேட்குமாம். உடனே அவைகளை தனக்கு உதவி புரியும் கோலின்ஸ்கி என்ற காவலாளியிடம் கொடுத்தனுப்பிவிடுவாராம். பின்னர் உள்ளே நுழையும் காவலாளிகள் அவரை நையப் புடைத்து மூர்ச்சையானபின் வெளியேறுவார்களாம். மூர்ச்சை தெளிந்த பின்தான், அவரெழுந்து, எங்கே நிறுத்தினோம் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு மீண்டும் எழுதுவாராம். என்ன பயங்கரமான சூழ்நிலையில் மக்களுக்காக எழுதினார், என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

அவரெழுதிக் கொடுக்கும் காகிதங்களை யெல்லாம் பற்பல

(4-பக்கம் பார்க்க)

13—9—50 அன்று. ராயப்பேட்டை 37-வது வட்ட புதுப்பேட்டை தி. மு. கழக திறப்பு விழாவின்போது, ஷை. கழகப் பொருளாளர். தோழர். பிரகாஷ் அவர்களது ஆண் மகவுக்கு. அறிஞர். C. N. அண்ணாதுரை "வீரமணி" என்று பெயரிட்டதின் நினைவாக, "போர்வாள்" வார இதழுக்கு நன்கொடை ரூ. 1-0-0. அளிக்கப் பட்டது.

விடுதலை பெற்றனர் வீரத் திராவிடர்!

—X—

சிறைக்கஞ்சாச் சிங்கங்கட்குச் செந்தமிழர் வரவேற்பு

—X—

மலர் மாலைக்குள் மாவீரர்கள்: மகத்தான பாராட்டு!

★

அவர்கள் குற்றவாளிகள் அல்லர்—இலட்சிய வாதிகள்! அவர்கள் பிழைபடு செயல் ஏதும் புரிந்தனரில்லை — வருங்காலத் திராவிடத்தின் விடிவெள்ளிகளாக இருந்தனர்! அவர்கள் தாக்கியது ஆட்சியாளர்களை அல்ல—ஆட்சியாளர்களின் அலங்கோலப் போக்கால் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை! அவர்கள் சென்றதும் பலாத்காரப் பாதை அல்ல—வீரத் திராவிடத்தை வடநாட்டுச் சிறையிலிருந்து விடுவிக்கும் விடுதலைப் பாதை! எனவே அவர்களை—நாட்டு விடுதலைப் போரில் நாட்டம் கொண்டுள்ள அந்த நல்லதம்பிகளை வரவேற்றுப் பாராட்டுவதுதான் விவேகிகள் செய்யவேண்டிய செயல்! ஆனால் சென்னை ஆட்சியாளர்கள் செய்ததோ, அந்த அறப்போர் அண்ணல்களை அக்கிரமக்காரர்கள் மட்டுமே இருக்கவேண்டிய வெஞ்சிறைக்குள் தள்ளியது!

அநீதி அநீதி என்றுதான் எவரும் கூறுவர் ஆளவந்தார்களின் இந்த ஆகாவழிப் போக்குகண்டு. ஆனால் கிடக்கிறார்கள் கிடக்கிறார்கள் என்று புன்முறுவல் பூத்த முகத்துடனே கூறிவிட்டு, "அடைந்தால் திராவிட நாடு—இல்லையேல் இடுகாடு" என்னும் வீர முழக்கத்தை விண்ணைப்பிளக்குமளவு எழுப்பிவிட்டு, வெஞ்சிறை வாழ்வதனை அன்புடன் ஏற்றுக் கொண்டனர் அந்த இளைஞரேறுகள்.

கே. டி. எஸ். மணி, காஞ்சி
வி. பரமசிவம், காஞ்சி
பி. வடிவேலு, கே. ஜெயராம், கே. ராஜி — கொத்தவால் சாவடி
லோகநாதன், அயனாவரம்
டி. கே. கபாலி, திருவட்டீஸ்வரன் பேட்டை
கு. வடமலை, மயிலை
ச. ப. அழகரசு, சதுரங்கப்பட்டினம்
கே. வி. கே. சாமி, வடசென்னை
பா. தர்மலிங்கம், ஜார்ஜ்டவுன்
நா. இராதாகிருஷ்ணன், கிருஷ்ணாம்பேட்டை
ஜி. கன்னியப்பன், புதுப்பேட்டை
நா. து. மகாதேவன், இராயபுரம்
எச். அப்துல் அமீத்கான், மூர்மார்க்கெட்
இரா. சம்பந்தன், இராயப்பேட்டை
டி. கோவிந்தன், புரசை
அ. தர்மலிங்கம், மூர்மார்க்கெட்

இந்த அஞ்சா நெஞ்சர்களைத் தான், ஆட்சிப்பீடம் **இரண்டு வாரக் கடுங்காவல் தண்டனை** கொடுத்து காராக்கிருகத்தில் தள்ளினர்!

இலட்சியவாதிகளுக்கு இருவாரக் கடுங்காவல்!

விடுதலை வீரர்கட்கு வெஞ்சிறை வாழ்வு!

கொடுமை! கொடுமை! உள்ளத்தைப் பதறவைக்கும் கொடுமை இது! என்றாலும் அவ்வீரர்கள், இத்தகு கொடுமைகள் என்னும் காட்டுப்பாதைகள் எண்ணற்றவற்றைக் கடந்தபிறகுதான் இன்பத் திராவிடம் என்னும் இலட்சியபூமியைப் பெறமுடியும் என்பதை நன்குணர்ந்தவர்கள். எனவே, இரண்டு வாரக் கொடுமையையும், திராவிடத் தனியரசு பெறுவதற்குத் தரப்படவேண்டிய விலையாகக் கருதி மனமகிழ்ச்சியுடன் அநுபவித்துவிட்டு, முதல் பதினேழு பேர், 18—11—50 சனிக்கிழமை பிற்பகல் 3—30 மணிக்கும், ஏனைய இருவர் 20—11—50 திங்கள் காலை 12-மணிக்கும் சென்னைச் சிறையிலிருந்து விடுதலையாயினர்.

தணலில் வெந்து திரும்பிய தங்களை வரவேற்க, திராவிட இளைஞர் கூட்டம், திரளாக வந்து குழுமிற்று சிறைச்சாலை வாயிலில்! அவர்கள் கைகளிலே மலர்மாலைகள்! முகத்திலோ, புன்னகைப் பூந்தோட்டம்! உதடுகளில், உத்தமர்களை வரவேற்கும் உன்னதச் சொற்கள்! உள்ளத்திலோ, இந்த மாவீரர்கள், இலட்சிய முன்னணிப் போராட்டத்தில் தங்கள் பங்கினைச் செலுத்திவிட்டனர் பூரிப்போடு-நாம், நம் பங்கினைச் செலுத்தும் நாள் எந்நாளோ என்ற ஆர்வ அலைகளின் கொந்தளிப்பு!

பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டு, உள்ளே இருந்த சிட்டுப் பறவைகள், சிறகை விரித்தடித்து, வெளியே பறந்துவரத் தொடங்கியதும், அந்த இலட்சிய இளைஞர்கள் ஒவ்வொருவர் கழுத்தையும் எண்ணற்ற மலர்மாலைகள் முத்தமிடலாயின.

வருக—வீரர்காள்—வருக வருக என்ற வரவேற்பொலி காற்றிலெல்லாம் கலந்துவரும் கீதமாக மாறிவிட்டது.

வெஞ்சிறைக் கஞ்சாத வீரவேங்கைகள் வாழ்க என்ற இடிமுழக்கம் ஓங்கி எழுந்து சிறைச்சாலைக் கட்டிடத்தையே சில நிமிஷ நேரங்கள் அதிர்ந்து அசைய வைத்துவிட்டது.

பாராட்டு—வரவேற்பு—மலர்மாலை அணிவிப்பு—வாழ்த்தொலி எழுப்புதல்—குசலம் விசாரித்தல்—'எப்படி இருந்தீர் உள்ளே?' என்ற ஆர்வக் கேள்விகள்—எப்படி இருந்திருப்போம் தெரியாதா? சிறைச்சாலைதானே என்ற இன்ப விடைகள்—இத்தகு நற்செயல்கள் சுமார் அரை மணிநேரம் தொடர்ந்து நடந்து, சிறைச்சாலை அதிபர்கள்தம் கவனத்தையெல்லாம் தங்கள்பால் ஈர்த்துவிட்டன.

(19-ம் பக்கம் பார்க்க)

★ சடசடெனச் சரிந்து வீழ்கிறது அகில இந்திய காங்கிரஸ் கோட்டை! ★

மாகாணத்திற்கு மாகாணம் மகத்தான எதிர்ப்பு!

வட்டாரந்தோறும் காங்கிரஸ் பட்டாளத்தில் பிளவு!

கோட்டைக்குள்ளேயே குத்தும் வெட்டும்!

காங்கிரஸ் கட்சியினர் கலங்கும் காட்சிகள்!

"சுதந்தர இந்தியாவின் ஆட்சிப் பீடத்தை அகில இந்திய காங்கிரஸ் அலங்கரிக்கத்தொடங்கி முழுமையாக ஆண்டுகள் மூன்று முடிந்து விட்டதோடன்றி மேலும் சிறிது காலம் ஆகிவிட்டது.

"என்றாலும் இந்தியா விடுதலை பெற்றதும் என்னென்ன நன்மைகள் தங்கட்குக் கிடைக்கும் என்று, பொதுமக்கள், அடங்காத ஆர்வத்துடன் ஆவலுடன ஆநந்தத்துடன் எதிர்பார்த்தார்களோ, அந்த நன்மைகளில் இரண்டொன்று கூட இதுவரை அவர்கட்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை.

"இன்னமும் சற்று வெளிப்படையாகவே பேசுவதானல், பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் இருந்ததைவிட, இன்றைய தினம், வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் சீரழிவு ஏற்பட்டு விட்டதாகவே எண்ணி மனம் பதைக்கிறார்கள் பொதுமக்கள்.

"இங்ஙனமாக சுதந்தர இந்தியாவில் தாங்கள் எதிர் பார்த்த இன்பப் புது வாழ்வு தங்கட்குக் கிடைக்காமல் போனதோடு ஏற்கனவே இருந்து வந்த வாழ்வுநிலையும் சீர்குலைந்து போனது கண்டு, மக்கள், பொதுவாக, வாழ்க்கையினிடமே ஒருவகை அவநம்பிக்கையும் அருவருப்பும் கொள்ளத் தொடங்கி விட்டார்கள்.

"மத்திய சர்க்காரிலும் சரி, மாகாண சர்க்கார்களிலும் சரி, ஆளவந்தார்களாக அமர்ந்துள்ளவர்களின் நடத்தை, இவ்வண்ணம் புண்பட்டுக் கிடக்கும் பொதுமக்களின் உள்ளத்திற்குச் சிறிதேனும் ஆறுதல் காட்டுவதாகவோ அன்பு தெரிவிப்பதாகவோ இல்லை.

"இதுதான் இன்றைய சுதந்தர இந்தியாவின் நிலை!"

* * * *

மேலே பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களைக் கண்ணுறும்போது, நம் போன்புக்குரிய பாரத புத்திரர்களின் முகங்களில் எள்ளும் கொள்ளும் வெடிக்கக் கூடும். அவர்களுடைய கண்களில் தீப்பொறி பறக்கக் கூடும். அவர்கள் சொற்களில் ஆத்திரமும் ஆவேசமும் ஆக்ரோஷத்துடன் பவனி வரக்கூடும். அவர்கள் ஒவ்வொருவர் உள்ளமும் ஒவ்வோர் எரிமலையாக மாறி நம்மீது துவேஷக் குழம்பை வாரி வீசக் கூடும். அவர்கள் கைகளிலே பதைபதைப்பும், கைகளில் பேனா இருந்தால் அந்தப் பேனாவிடத்தில் ஒரு துடிதுடிப்பும் ஏற்படக்கூடும். யாரையா அந்த சூனாமானா, இவ்வளவு தைரியமாக எங்களைப் பற்றி இழித்தும் பழித்தும் பேசுபவன்! இழுத்துவா அவனை! பிடித்துத் தள்ளுவோம் சிறைச்சாலைக்குள்! என்று சிலர் வெல்லிங்டன் வெண்பா வாசிக்கக்கூடும். வேறு சிலர், செச்சே! அது அல்லப்பா சரியான தண்டனை! இதுகளை யெல்லாம் ஒன்றாகத் திரட்டி ரயிலில் ஏற்றி, வடநாட்டுக்குக் கொண்டு சென்று, அங்கே தனித்தனியே சிறையில் அடைத்துவைத்து, வடநாட்டு உணவையே கட்டாயப் படுத்தி உண்ணவைத்து, வடநாட்டு மொழியையே கட்டாயப் படுத்திப் படிக்க வைத்து, வடநாட்டுத் துணியையே கட்டாயப் படுத்தி உடுக்க வைத்து, வடநாட்டு நாகரீகத்தையே கட்டாய முறையில் கைக் கொள்ளுமாறு செய்ய வேண்டும்— அதுதானப்பா இந்தத் "திராவிட நாடு"களுக்கேற்ற சரியான தண்டனை என்று [ஹிந்து இதழிலே சென்ற மாதம் ஒரு பேறிவாளர் பொன்னுரை புகன்றிருந்தாராமே அதுபோல] பேசி ஏசி தம் ஆத்திரத்தைத் தணித்துக் கொள்ளக்கூடும்.

நாம், தொடக்கத்தில் தந்துள்ள வாசகங்களைக் கண்ணுறும்போது, ஆளவந்த அற்புத சித்தர்களுக்கும் அவர்தம் மொழியை தம் வாழ்க்கை வழியாகக் கொள்பவர்கட்கும் கோபம் குதித்தெழத்தான் செய்யும்—அது இயற்கை—அவர்களும் மனிதர்கள்தானே!—கோபம் எப்படி அவர்கட்கு மட்டும் வாராமல் இருக்கும்—வரத்தான் செய்யும் — அந்தக் கோபத்தையும் கொதிப்பு மொழிகளையும் ஆத்திர அந்தாதியையும் ஆவேச அகவலையும் வேண்டாம் என்றுகூட கூறவில்லை நாம்—ஆனல் அந்தத் துவேஷஇடியும் மாச்சர்ய மின்னலும் செலுத்தப்பட வேண்டிய திசை நாம் இருக்கும் பகுதியல்ல—வடநாடு! வடநாட்டில், ஆச்சாரியா கிருபலானி அமர்ந்திருக்கும் பகுதி!—அதை மட்டும்தான் தெரிவிக்க ஆசைப்படுகிறோம் நாம்! ஆம்! நாம் முதலில் மொழிந்துள்ள முத்துக்களை எண்ணி எடுத்து நாட்டிற்கெல்லாம் நற்பரிசு என நயந்தளித்திருப்பவர் வேறு யாருமல்ல, ஆச்சார்யா கிருபலானி தான்!

ஆச்சார்யா கிருபலானி — அனைவருக்கும் தெரியும்—சூனாமானா அல்ல—திராவிட முன்னேற்றக் கழகம் அல்ல—தேசிய ஆலமரத்தில் பழுத்த பழம்—பழம் பெரும் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர்—எண்ணற்ற தேசிய வாதிகளின் உள்ளங்கவர் கள்வர்.

ஒன்றல்ல இரண்டல்ல சரியாகப் பன்னிரண்டு ஆண்டுகள், அகில இந்திய காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்தவர் அவர். அதுமட்டுமல்ல, ஓராண்டுக் காலம், காங்கிரஸ் இயக்கத்தின் முடிசூடா மன்னராக இருந்திருக்கிறார்—தேசிய வாதிகளின் திருவாசகப்படி மொழிவதானல் ராஷ்ட்ர பதியாகப் பிரகாசித்திருக்கிறார்.

இந்த ஆண்டு நடைபெற்ற அகில இந்திய காங்கிரசின் தலைவர் தேர்தலில், பாபு புருஷோத்தமதாஸ் தாண்டனை எதிர்த்துப் போட்டி போட்டவர் அவர். போட்டிபோட்டதுமட்டுமல்ல, "ராஜரிஷி" தாண்டனுக்கு அடுத்தபடியாக, காங்கிரஸ் உறுப்பினர்களின் ஓட்டுகளை ஏராளமாகப் பெற்றவர். உத்தமர் காந்தியாரின் உள்ளத்தில் உயர் இடம் பெற்றவர் என்று போற்றிப் புகழப்படும் சங்கர் ராவ் தேவ் அவர்களைவிட ஏழெட்டு மடங்கு அதிகமாக வோட்டுகளைப் பெற்றிருக்கிறார். தாண்டனுக்கும் அவருக்கும் சொற்ப ஓட்டுகள்தான வித்தியாசம்—ஒரு சில ஓட்டுகள் கூடுதலாகக் கிடைத்திருந்தால், இந்த ஆண்டு, அகில இந்திய காங்கிரசின் தலைமைப் பீடத்தை முறைப்படி அலங்கரித்திருக்க வேண்டியவர்தான் அவர். அந்த அளவுக்கு பாரத புத்திரர்களின் நெஞ்சத்தில் தன் அன்பு முத்திரையைப் பொறித்திருப்பவர், காங்கிரஸ் வட்டாரத்தில் ஏராளமான செல்வாக்குப் பெற்றிருப்பவர், கிருபலானி.

தாண்டன்—கிருபலானி தலைமைப் போட்டியில், மனிதகுல மாணிக்கம் என்று மட்டற்ற மகிழ்ச்சியுடன் மூவர்ணக்கொடியினால் பாராட்டிப் பேசப்படும் ஜவகர்லால் நேரு, கிருபலானியைத்தான் ஆதரித்தார்—இது, நாடறிந்த ரகசியம். அனைவருக்கும் தெரிந்த உண்மை.

கிருபலானி, முன்னே இருந்த அரசியல் அமைப்பு மன்றத்திலே முக்கிய உறுப்பினர். இப்போதிருக்கும் டில்லி பாராளும் மன்றத்திலும் இடம்பெற்றிருப்பவர்—காங்கிரஸ் பிரதிநிதியாக!

அவருடைய தூய்மையையும் நேர்மையையும் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் யாரும் குறைகூறியதில்லை இதுவரை. எதிரிகளும் அந்தத் துறையில் அவரைப் பழித்துப் பேசியதில்லை.

தலைவர் தேர்தலில், தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் அனைவரும் கிருபலானிக்குத்தான் கிருபைகூர்ந்து ஓட்டளிக்கவேண்டுமென்று, தேசிய ஏடு "தினசரி" திட்டவட்டமானமுறையில்தலையங்கம் தீட்டிற்று. பல பிரபல காங்கிரஸ் தலைவர்கள் கிருபலானிக்கு ஓட்டுப் போடுங்கள் என்று வெளிப்படையாகவே அறிக்கைகள் விடுத்து அவரை ஆதரித்தனர்.

இப்படியெல்லாம் காங்கிரஸ் இயக்கத்திலே பேரும் புகழும் பெருவாழ்வும் பெற்றுத் திகழ்பவர் கிருபலானி. அவர்தான் கூறுகிறார், ஆட்சிப் பீடத்திலே காங்கிரஸ் அமர்ந்ததன் காரணமாக அணுவளவு நன்மையும் கிடைக்கவில்லை நாட்டு மக்களுக்கென்று.

எதிர்க் கட்சிக்காரர்கள் இப்படிக் கூறியிருந்தால் ஏசுவதுதானே அவர்கள் வேலை என்று எளிதாகக் கூறி விரைவாகத் தட்டிக் கழித்துவிடலாம் அந்தக் கண்டன உரையை. ஆனல் இப்போது ஆட்சியாளர்களின் அலங்கோல வாழ்வை எடுத்துக் காட்டி இடித்துரைத்திருப்பவரோ, கிருப

தியாகத்தை விலைபேசும் தேசபக்த திலகங்கள்

லானி! காங்கிரஸ் தலைவர்களில் ஒருவர்! பன்னிரண்டு ஆண்டுகள காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்தவர்! என்ன விடை கூற இருக்கிறார்கள் பாரத புத்திரர்கள் இவர்தம் கண்டனமாரிக்கு?

"உணவுப் பஞ்சம் உள்ளத்தை மருட்டும் விதமாக இருப்பது, உண்மைதான். விலைவாசிகள் விஷம்போல ஏறிவிட்ட காரணத்தால் புழுப்போல் கிடந்து துடிக்கிறார்கள் பொதுமக்கள் என்பதும் உண்மைதான். வேலையில்லாத் திண்டாட்டம் வட்டாரத்திற்கு வட்டாரம் தோன்றி ஏழைமக்களை வாட்டி வதைப்பதும் மெய்தான். நாட்டிற்கு விடுதலைகிடைத்த பிறகு மக்கள் வாழ்விற்குஎத்தகைய நன்மையும்கிடைக்க வில்லை என்பதும் பொய்யல்லதான். என்றாலும் இதற்கெல்லாம் நாங்களா ஜவாப்தாரி? உணவுப் பஞ்சத்திற்குக் காரணம் இயற்கை செய்த சதி! வேலையில்லாத் திண்டாட்டம், பாக்கிஸ்தான் பிரிவினையின் விளைவு! விலைவாசிகளின் உயர்வு, கள்ள மார்க்கெட் கழுகுகளின் தந்திரம்!" என்று இந்த விதமாக, நாட்டிலே மூண்டுள்ள நானா விதமான சங்கடங்களுக்கும் காரணகர்த்தா நாங்களல்ல— இன்னின்னார் என்று கூறித் தப்பித்துக் கொள்ள முயலலாம் சில தேசபக்த திலகங்கள். ஆனால் அதற்கும் இடம் வைக்கவில்லை அன்பர் கிருபலானி. அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார் அவர், நாடு, வேதனைக் கூடாக இருப்பதற்குரிய முக்கிய காரணம், காங்கிரஸ் ஆட்சிதான் என்று.

அவர் கூறுகிறார் :—

"மக்கள் வாழ்விலே இன்று காணப்படும் மகத்தான துயரங்களுக்கும் சங்கடங்களுக்கும் காங்கிரஸ் கட்சிதான் பெரிதும் பொறுப்பாளி என்னும் உண்மையை நாம் ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

"அந்தக் காலத்தில், வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து அறப்போர் நிகழ்த்திய வேளையில், தாங்கள் செய்த தியாகங்களை எல்லாம், ரூபா அணா பைசாவாக மாற்றிப் பணம் சேர்க்கும் முயற்சியில், காங்கிரஸ் வாதிகள், இப்போது, வேகமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

"அந்தஸ்தையும் அதிகாரத்தையும் தரும் பதவிகளை மோகிப்பதில் காங்கிரஸ்வாதிகளுக்கிடையே பலமான போட்டி ஏற்பட்டிருக்கிறது.

"அறப்போர்க் காலத்தில் தன்னலமற்ற தொண்டுபுரிவதில் காங்கிரஸ்வாதிகளிடம் காணப்பட்ட போட்டா போட்டி மறைந்தேபோய்விட்டது. இப்போது, தன்னலத்தைப் பெருக்கிக் கொள்வதிலேயும், தன்னைச் சார்ந்தவர் தம் நலத்தை வளமாக்கிக் கொள்வதிலேயும்தான் பெரிய போட்டி காணப்படுகிறது.

"காங்கிரஸ்வாதிகளிடம் காணப்படும் இவ்வளவு அலங்கோலங்களும் போதாதென்றோ என்னவோ, காங்கிரஸ் கட்சியில், பொறுப்பற்ற சர்வாதிகார சக்திகள் வேறு நாளுக்கு நாள் வலுப் பெற்றுவருகின்றன.

"அந்த சர்வாதிகார சக்திகளால் காங்கிரஸ் இபக்கமே அழிந்துவிடுமோ என்று அஞ்சவேண்டிய அளவுக்கு நிலைமை மோசமானதாகிவிட்டது.

"காங்கிரஸ் கட்சியிலும் ஆட்சிப் பீடத்திலும் பொறுப்பான பதவிகளில் இருக்கும் பலரும், அவர்களுடைய கையாட்களும், தங்களுக்கு வேண்டியவர்கள் மட்டுமே வெற்றிபெறும் விதமாக, அண்மையில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல்களில் கையாண்டிருக்கும் பலவகையான சூழ்ச்சிகளை எண்ணிப் பார்க்கும் போது, ஜனநாயகம் என்பதே ஒரு கேலிக் கூத்துதானோ என்று கருதவேண்டியிருக்கிறது.

"காங்கிரஸ் கட்சியின் பஞ்சாயத்துத் தேர்தலிலிருந்து, ராஷ்ட்ரபதி தேர்தல்வரை, எல்லாத் தேர்தல்களிலும், இத்தகு சூழ்ச்சிமுறைகளே கையாளப்பட்டிருக்கின்றன.

"ஓட்டர்களிடம் சிறிதளவுகூட செல்வாக்கில்லாதவர்கள், எப்படி எப்படியோ, சூதுமார்க்கங்களால், காங்கிரசில், உயர்தர பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக ஆக்கப்பட்டிருக்கின்றனர்.

"அறப்போர்க் காலத்தில்கூட தன்னுடைய ஜனநாயகப் பண்பை இழக்காமல் இருந்த காங்கிரஸ், இப்போது, முற்றிலும் சர்வாதிகார மயமாக மாறிவிட்டது.

"இவ்வளவு அக்கிரமங்களுக்கும் சிகரம் வைத்ததுபோல மற்றோர் பெருங்கொடுமையும் நிகழ்த்தப் பட்டிருக்கிறது. காங்கிரஸ் கட்சியில் செல்வாக்குடன் இருப்பவர்கள், காங்கிரஸ் தேர்தல்களில், தங்கள் அன்புக்கும் அருளுக்கும் ஆளானவர்கள்மட்டுமே வெற்றி பெறவேண்டும் என்பதற்காக, சர்க்கார் உத்தியோகஸ்தர்களை, பலவழிகளிலும் பயன்படுத்திக்கொண்டிருக்கின்றனர்.

"எல்லாக் கட்சிகளுக்கும் பொதுவான அரசாங்க ஊழியர்களை, ஆளும்கட்சியினர், தங்கள் சொந்தக் கட்சியின் வளர்ச்சிக்காகப் பயன்படுத்திக் கொள்வது, எந்த ஜனநாயக நாட்டிலுமே,

காங்கிரஸ் கரையான்கட்குக் கிருபலானியின் கசையடி

ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கேவலமான நடத்தை.

"அந்த நடத்தை எந்த நாட்டிலுமே ஆபத்தைத் தரக்கூடியதென்றால், மக்கள், வறுமையிலும் அறியாமையிலும் கிடந்துழலும் காரணத்தால் தன்னம்பிக்கை அற்றிருக்கும் இந்த நாட்டில் எவ்வளவு அதிகமான ஆபத்தை அளிக்கக் கூடியது என்பதை நான் கூறத் தேவையில்லை."

காங்கிரஸ் கட்சியின் கோலாகலங்களை இவ்வளவு நீண்ட எழுத்தோவியமாகத் தீட்டியிருப்பது நாம்!—தமிழில்! ஆனால் இந்தக் கருத்துரைகளைத் தந்திருப்பவர்—கிருபலானி—ஆங்கிலத்தில்! ஆச்சார்யா கிருபலானி ஆங்கிலத்தில் அளித்த சொற்களை நாம் தமிழாக்கித் தந்திருக்கிறோம்—அது தான் வேறுபாடு—மற்றபடி இங்கே தரப்பட்டிருக்கிற ஒவ்வொரு எழுத்தும், சொல்லும், சொற்றொடரும், வாக்கியமும், சாட்சாத் கிருபலானியே அளித்தவை.

காங்கிரஸ் தலைவர்களில் முக்கியமான ஒருவர்—நேரு, பட்டேல், ஆச்சாரியார் இவர்களுக்கு அடுத்த நிலையிலே வைத்து எண்ணப்படுபவர்—தேசியவாதிகளிடம் அமோகமான செல்வாக்கும் அபாரமான பாராட்டுதலும் பெற்றவர்—கிருபலானி! ஆம்! அந்தக் கிருபலானிதான் கூறுகிறார், காங்கிரஸ், இவ்வளவு கீழ்த்தரமான நிலைமைக்கு காங்கிரஸ்காரர்களாலேயே இறக்கப்பட்டுவிட்டதென்று!

கிருபலானியின் கண்டனமாரியைக் காணும்போது, வெட்கம் நமக்கே தாங்கமுடியவில்லை—இவ்வளவு கேவலமும் கீழ்மைத் தன்மையும் நிலவுகிற நாட்டிலா நாம் நிலவுகிறோம் என்ற வெட்கம்! ஆனால் காங்கிரஸ் வாதிகளால் எப்படித்தான் இவ்வளவு அவமானத்தையும் தாங்கிக் கொண்டு, நாட்டிலே, நாலாறு பேர்கட்கு நடுவிலே, மனம் துணிந்து நடமாட முடிகிறதோ, நமக்குத் தெரியவில்லை.

கிருபலானியின் கருத்துரையை, காங்கிரஸ் வாதிகள், அதன் உண்மைக்காக ஒரு முறை, அதன் தெளிவுக்காக ஒருமுறை, அதன் அஞ்சாமைப் பண்புக்காக ஒரு முறை, அதைப் படித்துப் பார்த்துத் தங்கள் போக்கைத் திருத்திக் கொள்வதற்காக ஒருமுறை, தாங்கள் இருக்கும் இடம் சந்தனக்காடல்ல சாக்கடைக் குழி என்பதைத் தெரிந்துகொள்வதற்காக ஒரு முறை, ஆகப் பலமுறை, பலப்பல முறை படித்தாகவேண்டும். எத்தனை முறை படித்தாலும் தகும் காங்கிரஸ்வாதிகள் அவர் கருத்தை, அவ்வளவு திட்டவட்டமாக, அவ்வளவு வெட்ட வெளிச்சமாக, அவ்வளவு நீதி நேர்மையாக, தன் உள்ளக் கருத்தை உள்ளது உள்ளபடி எடுத்துரைத்திருக்கிறார் கிருபலானி.

அன்பர் ஆச்சர்யா கிருபலானி, காங்கிரஸ் தலைவர்கள் மீதும், அந்தத்தலைவர்களின் அன்றன்றுட நடத்தை மீதும், அந்த நடத்தையையும் அதன் விளைவுகளையும் தாங்கிக் கொண்டாக வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இருக்கும் தேசியத் தோழர்கள் மீதும், அவர்களுடைய அருவருக்கத்தக்க போக்கு மீதும் வீசியுள்ள குற்றச்சாட்டுகள் என்ன இலேசானவையா? சரி தான் கிடக்கட்டுமய்யா—சொன்னால் சொல்லிக் கொண்டு போகட்டும் என்று கூறி ஒதுக்கத் தக்கவையா?

ஒரு முறை அவருடைய வாசகங்களைப் படித்துவிட்டு, கண்ணை மூடிக்கொண்டு, கருத்தைத் திரையாக்கிப் பார்த்தால், அந்தத் திரையிலே, காங்கிரஸ் வாதிகள் மீது கிருபலானி சுமத்தும் குற்றங்கள் எத்தனை எத்தனை தென்படுகின்றன!

* மக்கள் நலனை மறந்த மகானுபாவர்கள்!
* தியாகத்தை விலை பேசும் தீரத் திருமேனிகள்!
* அதிகாரமோகம் பிடித்த ஆணழகர்கள்!
* பதவியாசை நிறைந்த பேரறிவாளர்கள்!
* தன்னலமே உருவான தயாள மூர்த்திகள்!
* சர்வாதிகாரச் சிந்துபாடும் சற்குண சீலர்கள்!
* தேர்தல்களை, சூழ்ச்சிக் கருவிகளாக்கும் திருவிளையாடல் பண்பினர்கள்!
* ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் ஜாம்பவான்கள்!
* அனைவர்க்கும் பொதுவான ஆட்சிப்பீடத்தைத் தங்கள் சொந்தக் கட்சியில், தாங்கள்சுகம்பெறப் பயன் படுத்திக்கொள்ளும் புத்தறிவாளர்கள்.
* நாடு வளம்பெறற்குரிய நற்பணி புரிய மறந்தவர்கள்!
* முன்னுவினில் இருந்ததைவிட மோசமான நிலைக்குத் தம்மரும் பொன்னாட்டைக் கீழே தள்ளிவிட்டவர்கள்!

இவ்வளவு வெளிப்படையாக ஆளவந்த கட்சியினர்தம் குற்றங்களை அடுக்கடுக்காக எடுத்துக் காட்டுகிறார் கிருபலானி—அதே கட்சியைச் சார்ந்தவர்—அந்தக் கட்சியின் பிரபலஸ்தர்!

கிருபலானி குற்றச்சாட்டுகளை வீசியிருக்கிறார் அதே நேரத்தில், அவருக்கு அருகே அமர்ந்

சர்வாதிகார காங்கிரஸ்மீது ஜனநாயக முன்னணியின் பாய்ச்சல்!

வண்ணம், அவர் உரைப்பன அவ்வளவும் உண்மை என்று கரகோஷம் புரிந்திருக்கின்றனர் மற்றும் அறுபது பேர்! அறுபது பேர் என்றால் ஆள் அடையாளம் தெரியாதவர்கள் அல்ல, அன்னக்காவடிகள் அல்ல, ஊர்பேர் இல்லாதவர்கள் அல்ல, ஊராருக்கு அறிமுகம் ஆகாதவர்கள் அல்ல, அத்தனைபேரும் அகில இந்திய காங்கிரசின் பிரபலஸ்தர்கள்! காங்கிரஸ் கட்சியின் தூண்கள்போன்றவர்கள்!

ரபி அகமத் கித்வாய்—அவர்களிலே ஒருவர். கித்வாய் — கவனமிருக்கட்டும் — இப்போதும், டில்லி ஆட்சிப்பீடத்தில் போக்குவரத்து அமைச்சராக இருப்பவர். பிரதமர் நேருவின் பிரதம சீடர் என்று பலராலும் கூறப்படுபவர்.

தோழர் பிரகாசம், மற்றொருவர்! பிரகாசம், காங்கிரஸ் உலகிலேயே மிகவும் பிரகாசம் பொருந்தியவர் காங்கிரசுக்குப் 'புதுவரவு' அல்லர் அவர்; பழம் பெரும் புள்ளி! பழுத்த பழம்! இப்போது உள்ள காங்கிரஸ் தலைவர்கள் அனைவரிலுமே மிக அதிக வயது படைத்தவர்! ஆந்திர கேசரி என்று, அச்சத்தோடு சில காங்கிரஸ் வாதிகளால், ஆநந்தத்தோடு பல ஆந்திர தோழர்களால் அழைக்கப்படும் பெருமை பொருந்தியவர் பிரகாசம்! யாருக்கும் தெரிந்த செய்திதான்—அவர், சில ஆண்டுகளுக்கு முன்னர், சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் முதலமைச்சராய் இருந்தவர்!

டாக்டர் பிரபுல்லா சந்திர கோஷ், இன்னொருவர்! வங்க மாகாணத்தில் காங்கிரஸ் தலைவராக இருந்தவர்—சென்ற ஆண்டுவரை.

கே. கேளப்பன்! ஆச்சார்யா கிருபலானியின் கருத்துரைக்கு 'ஆமாம்' போட்டவர்களில் இவரும் ஒருவர். இவரும் புதுமுகமல்ல காங்கிரசுக்கு! சென்ற முப்பது ஆண்டுகளாக கேரள மாகாணத்தில் காங்கிரஸ் கோட்டையைக் கட்டிக்காத்து வந்தவர். 1921-ல் தேசிய இயக்கத்தில் நுழைந்து, குருவாயூர் ஆலய நுழைவு அறப்போரில் அரும் பங்குகொண்டு, இமயம் முதல் குமரிவரை தன் புகழ்க்கொடியை நாட்டி, மலையாளப் பகுதியின் மாவீரர் என்ற பட்டத்தை காங்கிரஸ் ஏடுகளிடமிருந்து தட்டிப் பறித்துக் கொண்டவர். பல ஆண்டுகள் கேரள மாகாண காங்கிரஸ் தலைவராக இருந்தவர். சென்ற ஆண்டுதான் அந்தப் பதவியை உதறி எறிந்தார் காங்கிரஸ் கட்சியில் நுழைந்து தன் வெற்றிக் கொடியை நாட்டிவிட்ட ஊழல்தேவதையின் கொடுமையைப் பொறுக்க முடியாமல்!

லாலா பீம்சென் சாசார், பாஞ்சால காங்கிரஸ் பிரபலஸ்தர். சதீக் அலி, கோவிந்த் சாகாய் ஆகியோர் உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர்கள். இவர்களும், ஆச்சார்யா கிருபலானியின் குற்றச்சாட்டுகள் அத்தனையும் உண்மை என்று மனமார ஒப்புக்கொண்டுள்ளனர்.

கிருபலானியின் கருத்துரை மீது தம் ஒப்புதல் முத்திரையைப் பொறித்துள்ள அறுபது பேரும் இப்படித்தான் ஒவ்வொரு மாகாண காங்கிரசிலேயும் உயர் நிலையில் இருப்பவர்கள்; பழம் பெரும் தலைவர்கள்; அரும்பெருந்தியாகம் புரிந்தவர்கள்; தேசிய ஏடுகளால் தினம் தினம் புதுப் புது பட்டங்கள் சூட்டப்பட்டு பேரும் புகழும் பெருத்த அளவில் பெற்றிருப்பவர்கள்! சாமான்யர்களல்ல! விலாசம் தெரியாத வீணர்களல்ல!

புருஷோத்தமதாஸ் தாண்டன் தலைமையில் அண்மையில் நடைபெற்றதல்லவா அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நாசிக் என்ற இடத்தில், அதே நாசிக்கில்தான், ஆச்சார்யா கிருபலானி, பிரகாசம், கேளப்பன், பி. சி. கோஷ், லாலா பீம்சென் சாசார், கோவிந்த் சாகாய் முதலான அறுபது பேர், இத்திங்கள் தொடக்கத்தில், ஒன்றாகக் கூடி, கலந்து பேசி, காங்கிரசிலே புகுந்துள்ள ஊழல்களை ஒழித்துக் கட்டுவதற்காக, காங்கிரஸ் ஜனநாயக முன்னணி என்ற பெயரால் ஒரு புதுக் கட்சியை உருவாக்கியிருக்கின்றனர். அவ்வமயம், அன்பர் கிருபலானி, அந்த முன்னணியின் குறிக்கோளையும் அது தோன்றவேண்டியேற்பட்ட காரணத்தையும் நன்கு விளக்கி அறிக்கையொன்று வெளியிட்டார். அந்த அறிக்கையின் வாசகங்கள்தான், நாம், கட்டுரைத் தொடக்கத்திலும், பிறகும், தந்திருப்பவை.

இந்தப் புதுக்கட்சி காங்கிரசிற்குள்ளேயே இருந்து பணியாற்றுமாம். ஆனால், காங்கிரசின் உறுப்பினர்களாக இல்லாதவர்களும் இதில் சேரலாமாம். இந்தக் கட்சியின் நோக்கம், காங்கிரஸ் கட்சியில் நுழைந்துள்ள சழக்குகளை அகற்றி, ஊழல்களை ஒழித்து, கொடுமைகளை விலக்கி, சர்வாதிகார மமதையை மட்டந்தட்டி, காங்கிரஸ் கட்சியைப் புனிதமானதாக மாற்றி அமைத்து மறுகோலம் செய்வது தானாம்!

காங்கிரசில் உறுப்பினர்களாக இல்லாதவர்களைச் சேர்த்துக்கொண்டு, காங்கிரசிற்குள்ளேயே இந்த முன்னணிக்கட்சி இருப்பது எப்படி முடியும், எத்தனை நாட்களுக்கு அது நடக்கும்—அது வேறு விஷயம். அத்திப் பழத்தைப் பிட்டுப்பார்த்தால் அத்தனையும் சொத்தை என்பதைப்போல

வங்க மாகாணத்தில் காங்கிரஸ் பங்கமடையும் பரிதாபம்!

காங்கிரஸ் கட்சி முழுவதுமே ஊழல்மயமாக மாறிவிட்ட இன்றைய நிலையில், இந்த முன்னணிக் கட்சியினரால் அதைத் தூய்மைப் படுத்துவது என்பது நடக்கிற செயலா? இயலுமா அது? —அதுவும் வேறு விஷயம். காங்கிரஸ் கட்சியிலே தன் வெற்றிக் கொடியை நாட்டிவிட்ட சர்வாதிகாரச் சழக்கினை அதன் வெற்றிப் பீடத்திலிருந்து விரட்டியடிக்க இவர்களால் முடியுமா?—அதுவும் வேறு விஷயம்தான். அவைகளெல்லாம் அல்ல இங்கே கவனிக்கப்பட வேண்டியவை. காங்கிரஸ் கட்சியின் அதிகார பூர்வமான அநுமதியைப் பெருமல், அதிகார பூர்வமாக உள்ள தலைவர்களை எதிர்த்து, அதிகார பூர்வமான நடத்தைகளையும் எதிர்த்து, இந்தியத் துணைக்கண்டத்தின் நாலாபுறங்களிலும் உள்ள பல காங்கிரஸ் பிரபலஸ்தர்கள் புதுக்கட்சி ஒன்றைத் தொடங்கியிருக்கிருர்கள். அதாவது, காங்கிரஸ் கோட்டை சடசடவெனச் சரிந்து வீழத் தொடங்கியிருக்கிறது—அதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி எப்படி வெகு விரைவில் **வெறும்** சோஷலிஸ்ட் கட்சியாக மாறி, காங்கிரசைவிட்டே வெளியேறும் நிர்ப்பந்தத்திற்குத் துரத்தப்பட்டதோ காங்கிரஸ் அதிகார வர்க்கத்தால், அப்படித்தான், இந்த **காங்கிரஸ் ஜனநாயக முன்னணியும்** வெறும் ஜனநாயக முன்னணியாக மாற அதிக நாள் ஆகாது.

ஒவ்வொரு மாகாணத்திலேயும், இந்த ஜனநாயக முன்னணிக் கட்சிக்குக் கிளைகள் நிறுவப்படும்வேலை வெகவேகமாக நடைபெற்றுவருகிறது. ஆந்திர நாட்டில் தோழர் டி. பிரகாசத்தைத் தலைவராகவும், தென்னேட்டி விஸ்வநாதம், பி. எஸ். மூர்த்தி, வெங்கட ரெட்டி ஆகியோரைச் செயலாளர்களாகவும் கொண்டதாக கிளை அமைந்திருக்கிறது.

* * * *

காங்கிரஸ் கோட்டை, **ஜனநாயக முன்னணி** என்ற வெடிகுண்டின் தாக்குதலால், அதன் நாலாபுறங்களிலும் சரிந்து வீழத் தொடங்கியிருக்கிற இதே நேரத்தில், வங்காளத்தில், அந்த ஜனநாயக முன்னணியைச் சேர்ந்த **பிரபுல்ல சந்திர கோஷ்** அவர்களும், அந்த முன்னணியைச் சேராத டாக்டர் சுரேஷ் சந்திர பானர்ஜி, சாரு சந்திர பந்தாரி, ஆநந்த பிரசாத் சவுத்ரி, பிரமத நாத் பனர்ஜி, ஹரிபத் சட்டர்ஜி முதலான நூற்றுக்கு மேற்பட்ட காங்கிரஸ் பிரபலஸ்தர்களும் ஒன்று கூடி, இனியும் காங்கிரஸ் கட்சியில் உறுப்பினர்களாக இருப்பது என்பது நாட்டுக்கு நாம் செய்யும் துரோகமாகவே முடியும் என்று கூறி, காங்கிரஸ் கட்சியை விட்டே வெளியேற முடிவு செய்துவிட்டனர்.

அந்த முடிவின் விளைவாக, **கிரிஷாக் பிரஜா மஸ்தூர் சபா** [உழவர்கள்—மக்கள்—பாட்டாளிகள் கழகம்] என்ற பெயரில் ஒரு புதுக்கட்சி உருவாகியிருக்கிறது வங்காளத்தில்.

இந்தக் கட்சியின் முக்யஸ்தர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், தங்கள் கட்சிக்கும் கிருபலானியின் முன்னணிக் கட்சிக்கும் கொள்கையளவில் வேறுபாடு எதுவும் கிடையாது என்றும், அந்தக் கட்சியினர் காங்கிரசுக்கு உள்ளிருந்தே பணிபுரிவது என்று கொண்டுள்ள நடைமுறைத் திட்டம்தான் தங்கட்குப் பிடிக்கவில்லை என்றும், காங்கிரசைவிட்டு வெளியேறி தனிக்கட்சி அமைத்துப் பணிபுரிவதுதான் சிறந்த முறையாகத் தங்களால் கருதப்படுகிறது என்றும், இப்போதைக்குத் தங்கள் கட்சி வங்காளத்தில் மட்டுமே வேலை செய்தாலும் விரைவில் பிற மாகாணங்களிலும் பணியாற்றத் தொடங்கும் என்றும், ஜெயப்பிரகாசரின் சோஷலிட் கட்சியுடன் ஒத்துழைக்கவும் தாங்கள் தயார் என்றும் விளக்கமாகத் தெரிவித்துள்ளனர்.

காங்கிரசைவிட்டு வெளியேறுவதற்கான காரணங்களைத் தெரிவிக்கையில், காங்கிரஸ் கட்சியில், முன்னாளிலும் சரி, இன்னாளிலும் சரி, சேராமல் வெளியே ஏராளமான தோழர்கள் இருக்கிருர்கள் என்றும், அவர்களிற் பலர் அறிவும் ஆற்றலும் நேர்மையும் ஒழுக்கமும் நிறைந்த நல்லறிவாளர்கள் என்றும், அவர்களுடைய தீவிர ஒத்துழைப்பும் கூட்டுறவும் கிடைத்தாலன்றி நம் நாட்டை முன்னேற்றுவிப்பதென்பது இயலாத செயல் என்றும், காங்கிரசைவிட்டு தாங்கள் வெளியேறினால்தான் அவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்றும், அவர்களுடைய அறிவாற்றல்களைப் பயன்படுத்திக்கொள்வதே அறிவுடைமை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வங்காளக் கட்சியின் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் டாக்டர் பிரபுல்ல சந்திர கோஷ்—நாம் முன்னரே தெரிவித்திருக்கிறோம்—வங்க மாகாண காங்கிரசின் முன்னாள் தலைவர்.

இக் கட்சியின் முக்கியஸ்தர்களில் ஒருவராகிய சாரு சந்திர பனர்ஜி, மேற்கு வங்க மாகாண முன்னாள் காங்கிரஸ் செயலாளர்.

காங்கிரஸ் காதலியைக் கைவிட்டனர் கல்கத்தா காதலர்கள் !

ஆநந்த பிரசாத் சவுத்ரி—இவர், கட்சியின் மற்றொரு பிரபலஸ்தர் — முன்னாளில், மேற்கு வங்க காங்கிரஸ் அமைச்சராக இருந்தவர்.

இக் கட்சியின் முக்கியஸ்தர்களிலே நால்வர், மேற்கு வங்க சட்டசபை உறுப்பினர்கள்.

ஜனநாயக முன்னணிக் கட்சியின் தலைவர்களைப் போலவேதான், இந்த கிரிஷக் பிரஜா மஜ்தூர் கட்சியின் தலைவர்களும், நாட்டிற்கு நன்கு அறிமுகமான பெரிய புள்ளிகள். நெடுங்காலமாக, காங்கிரஸ் கட்சியில் இரண்டறக் கலந்துநின்று ஓயாமற் பணிபுரிந்துவந்த சிறப்பும் செல்வாக்கும் மிக்கவர்கள. காங்கிரஸ் கட்சிக்கு அரும்பணி ஆற்றுவதையே தங்களுடைய இருதய கீதமாகவும் வாழ்க்கையின் முழுநேரத் தொண்டாகவும் கொண்டவர்கள், "காங்கிரஸ் என்றால் இந்தியா—இந்தியா என்றால் காங்கிரஸ்" என்னும் பழைய மொழியினிடம் அழியாக் காதல் கொண்டிருந்தவர்கள்.

இத்தகு உண்மைக் காதலர்கள் எல்லாம் கூட காங்கிரஸ் காதலியைக் கைவிட்டுவிட்டு வெளியேறவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்றால், காங்கிரஸ் மாதரசியின் ஒழுக்கம் எவ்வளவு கெட்டுவிட்டது என்பதையும், அந்த ஆரணங்கின் அழகுவாழ்வு எவ்வளவு வேக வேகமாக அழிவுப்பாதை நோக்கி அவசரப் பயணம் புரிந்துகொண்டிருக்கிறது என்பதையும் நாம் கூறத் தேவையில்லை—அன்னை பாரதமாதாவின் அருமந்த புத்திரர்களே கணக்குப் போட்டுப் பார்த்து உண்மைநிலையை உணர்ந்துகொள்ளட்டும்

* * * *

"சுதந்தர இந்தியா உருவாகிய பிறகு ஜெய்பூரில் கூடிய முதல் காங்கிரஸ் மாநாட்டில், முதலாளித்துவ சுரண்டல் அற்ற ஜனநாயக சமுதாயத்தை உருவாக்குவதுதான் காங்கிரஸ் கட்சியின் இலட்சியம் என்னும் அரிய தீர்மானம் ஆநந்தத்துடன் நிறைவேற்றப்பட்டது.

"ஆனால் அன்றுமுதல் இன்றுவரை, அந்த இலட்சியபூமியை நோக்கி அவசரப் பயணம் புரிவதற்குப் பதிலாக, காங்கிரஸ், கொஞ்சம் கொஞ்சமாக அந்த இலட்சியத்தைவிட்டு விலகி, இப்போது, அந்த இலட்சியத்திற்கு வெகு தூரத்திற்கு இப்பால் உள்ள ஓர் இடத்திற்கு வந்துவிட்டது.

"பாட்டாளி மக்கள், உழவர்கள், மத்திய தர வகுப்பினர் ஆகியோரின் வாழ்வை வதைத்து வரும் வேதனைகளைப் போக்க, காங்கிரஸ் ஆட்சியாளர்கள், இன்றுவரை, சின்னஞ்சிறு பணி ஒன்றேனும் புரிந்ததாகத் தெரியவில்லை.

"குறிப்பாக, உணவுப்பஞ்சமும் உடைப்பஞ்சமும், ஆளவந்தார்களால் இந்த விநாடிவரை தீர்க்கப்படாமலேதான் இருக்கின்றன.

"இந்தக் கொடுமைகள் பலவற்றால் பாட்டாளி மக்கள் பதைபதைத்துத் துடிதுடிப்பது போதாதென்று, கள்ளச் சந்தை, லஞ்சம் வாங்கும் பழக்கம் ஆகிய இருபெரும் சுரண்டல் இயந்திரங்கள் வேறு நாடெங்கும் நடமாடத் தொடங்கி மக்கள் வாழ்க்கையை மகத்தானதோர் பாலைவனமாக மாற்றிவிட்டன.

"இந்தச் சுரண்டல் இயந்திரங்கள் இரண்டினையும் வெடிவைத்துத் தகர்த்தெறிந்து, பொதுமக்களை, இவற்றால் கசக்கிப் பிழியப்படும் பெருங்கொடுமையிலிருந்து காப்பாற்றவேண்டுமே என்ற கவலை, மனிதாபிமானம், ஜனநாயக உணர்ச்சி, மத்திய—மாகாண — காங்கிரஸ் ஆட்சியாளர்கள் யாருக்குமே இல்லை.

"ஆட்சியாளர்களைப் போலவேதான் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் இந்த வேதனைமிகு நிலைமைகளை மாற்றச் சிறிதளவும் முயன்றனரில்லை.

"மாறாக, காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே, லைசென்ஸ் பெர்மிட் முதலியவற்றை வாங்குவதில் ஏற்பட்டுள்ள தீவிரப் போட்டி காரணமாக, ஊழலும் குழப்பமும் சகிக்கமுடியாத அளவுக்கு வளர்ந்துவிட்டன.

"அண்மையில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல்களிலே, ஊழல், உச்சநிலைபெற்று, காங்கிரஸ் இயக்கத்தின் அடிப்படையையே கலகலக்கச் செய்துவிட்டது.

"இந்த உண்மைகளையெல்லாம் ஒன்றாக நிறுத்திவைத்து நடுநிலை உள்ளத்துடன் பார்க்கும் போது, முதலாளித்துவ சுரண்டலற்ற ஜனநாயக சமுதாயத்தை உருவாக்குவது என்னும் எங்கள் இருதய கீதம் நடைமுறை சாதமாத மாறவேண்டுமானால், நாங்கள் அத்தனைபேரும் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறித்தானாகவேண்டும். ஆம்! அந்த ஒரு முடிவைத் தவிர வேறு எந்த முடிவிற்கும் எங்களால் வரமுடியவில்லை!"

கிரிஷக் பிரஜா மஜ்தூர் கட்சியைத் தொடங்கியுள்ள வங்காளத் தலைவர்களின் அறிக்கையிற் காணப்படும் சில வாசகங்கள் இவை! வாசகங்களா இவை! அல்ல அல்ல! காங்கிரஸ் இருதயத்தின்மீது பாய்ச்சப்பட்டுள்ள கூர்முனை ஈட்டிகள்! அந்த இயக்கத்தை அலறித் துடித்து அழியவைக்கும் டார்ப்பிடோக்கள்!

* * * *

அழிவுப் பாதை நோக்கி அவசரப்பயணம் புரியும் காங்கிரஸ்!

* நாசிக்கில் தோன்றி, நாடெங்கும் தன்கிளைகளை நிறுவிவரும் ஜனநாயக முன்னணிக் கட்சி!

* கல்கத்தாவில் தோன்றி, வங்காளமெங்கும் தன் ஆட்சிக் கொடியை உயர்த்திவரும் கிரிஷக் பிரஜா மஜ்தூர் கட்சி!

இந்த இரண்டுதானா காங்கிரஸ் சாம்ராஜ்யம் சவக்குழிநோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என்னும் உண்மையை எழிலுற விளக்கிடும் காலக் கண்ணாடிகள்? இல்லை—இல்லை — இன்னும் பல இருக்கின்றன.

எந்த வங்காளத்தில், பிரபல காங்கிரஸ் தலைவர் பிரபுல்ல சந்திர கோஷ், காங்கிரஸ் கட்சிக்கு ஒரு "தலைமுழுக்கு"ப் போட்டுவிட்டு, அந்த இயக்கத்தைவிட்டே வெளியே வந்து, கிரிஷக் பிரஜா மஜ்தூர் கட்சி என்னும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்கியிருக்கிறாரோ, அதே வங்காளத்தில், அவரும் அவர் குழுவினரும் வெளியேறிய பிறகுகூட, மூன்று தனித்தனிக் குழுக்களாகப் பிளவுபட்டிருக்கிறது மிச்சமிருக்கும காங்கிரஸ். பி. சி. சென், ஒரு குழுவின் தலைவர். எஸ். எம் கோஷ், மற்றொரு குழுவின் தலைவர். மேற்கு வங்க காங்கிரஸ் பிரதமர் பி. சி. ராய், இன்னொரு குழுவின் தலைவர். இந்த மூன்று குழுக்களுக்கும் இடையே ஓயாத சண்டை! அந்த ஓயாத சண்டையின் விளைவாக தீராத மாச்சரியம்!

வங்காள காங்கிரஸ் மாளிகை இதுபோல, மூன்று பகுதிகளாகப் பிளவுண்டுபோய், ஒன்றுடன் ஒன்று முட்டி மோதி, மண்ணோடு மண்ணாகி மறைந்துபோகும் பரிதாபத்தைக் கண்டு மனம் பதைபதைத்த மாபெருந் தலைவர்கள் சர்தார் பட்டேல்—பண்டித நேரு — இருவருமே, நிலைமையைச் சீர்ப்படுத்தப் பலமுறை சென்றனர் கல்கத்தாவிற்கு! ஆனால், பலன்? அதுதான் இல்லை!

வங்காள காங்கிரஸ், ஏற்கனவே நோயாளி காங்கிரஸ் என்னும் பெயர்பெறும் நிலையில்தான் பரிதாப வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்தது. சென்ற ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் பெறமுடிந்த வோட்டுகள் 5780 தான். ஆனால் அதே நேரத்தில், காங்கிரசை எதிர்த்துநின்ற அறப்போர்வீரர் சரத் சந்திர போஸ் பெற்ற வோட்டுகள்—கவனமாகப் படியுங்கள்—19,030. ஆம், ஆம்! அவ்வளவு கேவலமான நிலைதான் வங்காளத்தில் காங்கிரசுக்கு! இந்த இலட்சணத்திலேதான் காங்கிரசுக்குள் அங்கே மூன்று கோஷ்டிகள்! இப்படி இருந்தால் வங்க காங்கிரஸ் எப்படி உயிர்வாழ முடியும் அதனால் இனியும்?

வங்க மாகாணத்தில் காங்கிரசின் நிலை இது! பஞ்சாபில் எப்படி இருக்கிறது தேசிய காங்கிரஸ் சற்று சிந்தித்துப் பார்ப்போம்.

பஞ்சாப் மாகாணத்தில், காங்கிரஸ், இருவேறு முகாம்களாகப் பிளவுபட்டுவிட்டது. ஒரு முகாமிலே இருப்பவர்கள், மற்ற முகாமிலே இருப்பவர்களைப் பார்த்தாலே தீட்டு—அவர்கள் பெயரை வாயால் சொன்னாலே பாவம் என்று கருதி வெறுத்து ஒதுக்குகின்றனர். இரு முகாமிலே, ஒன்று, வடதுருவமானால், மற்றொன்று தென் துருவமாகிவிடுகிறது. ஒன்று, சிட்டாக உலவினால், மற்றொன்று, அதைக் கொத்தவரும் வல்லூறாக மாறிவிடுகிறது. பகை, அந்த அளவுக்கு, இரு சாராரையும் வெட்டிப் பிரித்துத் தனித்தனி ஆக்கிவிட்டது. தோழர் பார்க்கவா என்பவரும், அவருடன் பஞ்சாப் மாகாண ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஏனைய மந்திரி சபை மகானுபாவர்களும், ஒரு குழுவின் தலைவர்கள்! லாலா பீம்சென் சாச்சார், அதன் எதிர்க் குழுவின் மூலவர்! இந்த இரு குழுவினர் என்னும் இடுக்கிமுனைகளிற் சிக்கி, பஞ்சாப் காங்கிரஸ், இப்பவோ பின்னையோ இன்னும் சற்றுநேரத்திலோ என்று மரணமொழிகளை மனனம் செய்தபடி இருக்கிறது.

பஞ்சாப் மாகாணத்திலேயே வேறோர் பக்கம், வீர சீக்கியர்கள் போர்க்கோலம் கொண்டு, காங்கிரஸ் கட்சியை அழித்தொழிப்பதே எங்கள் வேலை என்று இடிமுழக்கம் புரியத் தொடங்கிவிட்டனர். நாங்கள் இந்துக்களல்ல—இந்துமதமும் எங்களுடையதல்ல என்று அழுத்தந்திருத்தமாக அறிவிக்க ஆரம்பித்துவிட்டனர். "எங்கள் மார்க்கமும் வேறு--மொழியும் வேறு--எங்கள் இனமும் வேறு—பண்பும் வேறு — ஆகவே எங்கட்குத் தேவை தனி மாகாணம்—சீக்கியர்கள் வாழ ஒரு சீக்கியஸ்தான் ஏற்படுத்தாகவேண்டும்" என்று பற்பல மாநாடுகளில் சீக்கிய இளைஞர்கள் சீறும் சிறுத்தைகளென மாறி செந்தணல் அனைய மொழிகளாலே தங்கள் உள்ளக் கருத்தை உரத்த குரலில் உலகுக்கெல்லாம் உரைத்திட முனைந்துவிட்டனர்.

எங்கள் வர்க்கம் வாழ ஒரு வட்டாரம் தேவை என்ற இலட்சிய கீதத்தை அஞ்சாமல் இசைத்த குற்றத்திற்காக சீக்கியர் தலைவர் மாஸ்டர் தாரா சிங், பதினைந்து மாதங்கள் சிறைச்சாலைக்குள் அடைக்கப்பட்டார். உடனே, 'சிறைச்சாலைஎன்ன செய்யும் உள்ளத்தில் உறுதி இருக்கும்போது?' என்ற கோஷகானத்தைத்தான் அந்த இளைஞர்

செத்தவன் நிலையில் காங்கிரஸ், உத்தரப் பிரதேசத்தில்!

தலைவர் எழுப்பினரேதவிர ஆமையென அஞ்சிடவுமில்லை; ஊமையென வாய்மூடிடவுமில்லை.

பதினான்கு மாத சிறைவாழ்வுக்குப் பிறகு சிரித்த முகத்துடனே வெளியே வந்தார் தாராசிங். வந்ததும், தணலில் வெந்த தங்கம் முன்னிலும் பலமடங்கு அதிக ஒளி வீசித் திகழ்வதுபோல, சிறைபுகுமுன் இருந்ததைவிட மேலும் பலமடங்கு தீவிரமாக, தனி மாகாணக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். எனவே மீண்டும் வெஞ்சிறைக்குள் வீழ்த்தப்பட்டு கூண்டுக் கிளி எனத் தியாக வாழ்வு வாழ்கிறார்.

தங்கள் தலைவர் தாராசிங்குத் தரப்பட்டுள்ள தண்டனையின் கொடுமை கேட்டு சீக்கிய உலகமே சீறி எழுந்து, காங்கிரஸ் மாளிகையைத் தவிடு பொடியாக்கத் துணிந்து முன்வந்திருக்கிறது.

சீக்கிய இனத்தவரின் எழுச்சிக் குரலாகிய அகாலி தளம் என்னும் ஆற்றல்மிகு கட்சி, இனி, சீக்கிய இனத்தவர்கள் யாரும் காங்கிரஸ் கூடாரத்தில் உலவக்கூடாது, உடனடியாக அனைவரும் வெளியே வந்துவிட வேண்டும் என்று தன் உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் தாக்கீது பிறப்பித்துவிட்டது.

பஞ்சாப் மாகாணத்தில் காங்கிரஸ் கட்சியின் கோரக்கதை இது என்று சொன்னால், உத்தர பிரதேசத்திலோ காங்கிரசின் நிலை, கண்டவர் கைகொட்டிச் சிரிக்கத் தக்க அளவு, பிளவும் பேதமும் பகையும் பொச்சரிப்பும் நிறைந்ததாக மாறிவிட்டது. அங்கே, கட்சி, இரண்டு மூன்று துண்டுகளாக உடைந்து போயிருக்கிறது. அவற்றை இனி ஆண்டவனே முன்வந்து இணைத்துவைக்க முயன்றாலும் அந்தத் துண்டுகள் ஒன்றுடன் ஒன்று ஒட்டமாட்டா. ஒட்ட முடியாத அளவிற்கு, ஒன்றைவிட்டு ஒன்று எட்டிப் போய்விட்டன! பாபு புருஷோத்தம்தாஸ் தாண்டன் அந்தக் குழுக்கள் பலவற்றில் ஒரு குழுவிற்குத் தலைவர்! ரபி அகமத் கித்வாய், மற்றொரு குழுவிற்குத் தலைவர்! தாண்டன் நிற்கும் திக்கு நோக்கியும் திரும்பமாட்டார் கித்வாய்! கித்வாய் ஏறும் மோட்டாரில் மறந்துகூட ஏற மாட்டார் தாண்டன்! இந்த இருபெருந் தியாக மூர்த்திகளுக்கிடையே அத்துணை பாசம்! அந்யோந்யம்! இணைபிரியா நட்பு! இந்த இலட்சணத்தில், தாண்டனோ, சர்தார் வல்லபாய் படேலின் செல்லப்பிள்ளை! கித்வாயோ, பண்டித ஜவகர்லால் நேருவின் பேரன்புக்குப் பாத்திரமானவர்! நேருவுக்கும் படேலுக்கும் இருக்கும் உறவோ கீரிக்கும் பாம்புக்கும் இருக்கும் உறவைவிடக் கொஞ்சமும் மாறானதல்ல—ஊருக்கெல்லாம் தெரிந்த உண்மை இது! இந் நிலையில், உத்திரப் பிரதேச காங்கிரஸ் உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருப்பதில் வியப்பென்ன இருக்கிறது?

உத்தரப் பிரதேச காங்கிரஸ் கிட்டத்தட்ட செத்தவன் நிலையில்தான் இருக்கிறது என்னும் உண்மையை, அந்த மாகாண காங்கிரஸ் வட்டாரத்தில் அண்மையில் நடைபெற்ற மற்றோர் முக்கிய நிகழ்ச்சி, இன்னமும், சற்றுத் தெளிவாக விளக்கும் தன்மை படைத்ததாகும். உத்தரப் பிரதேச மாகாணத்தில் ஆளவந்தார்களாக இருக்கும் காங்கிரஸ் தலைவர்களின் நடத்தை, ஒழுக்கக் கேட்டின் உறைவிடமாக உருமாறிவிட்ட காரணத்தால், அந்த மாகாணத்து காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் பலர், சட்டசபை காங்கிரஸ் கட்சியை விட்டு விலகி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வந்தமரும் இடத்திலேயே தாங்களும் சென்று அமரத் தொடங்கிவிட்டனர்! சென்று அமரத் தொடங்கிவிட்டதுமட்டுமல்ல, 'மக்கள் காங்கிரஸ்' என்ற பெயரால் அண்மையில் தனிக்குடித்தனமும் தொடங்கிவிட்டனர்—அதாவது, காங்கிரஸ் கூடாரத்தை விட்டே முற்றிலும் விலகிச் சென்றுவிட்டனர்.

*　　*　　*

உத்தரப் பிரதேசத்தைவிட மெத்தவும் மோசமான நிலையில் கிடந்து தவிக்கிறது காங்கிரஸ், விந்தியப் பிரதேஷ் என்ற மற்றோர் மாகாணத்தில்! அங்கே, பிணக்கும் பூசலும் பகைமையும் பொறாமையும் தேசபக்தர்கள்தம் உள்ளத்தை அரித்துத் தின்றுவிட்ட காரணத்தால், காங்கிரஸ் கட்சி, அடியோடு, கலகலத்துப் போய்விட்டது. அந்த மாகாண காங்கிரஸ் கமிட்டியை, அகில இந்திய காங்கிரஸ், அண்மையில்தான் கலைத்துவிட்டது.

*　　*　　*

ஒரு புறம் மிஸ்ரா, தர்மாதிகாரி, ஆகிய தலைவர்கள் தங்கள் பக்கம் இழுக்க, மற்றோர் புறம் கண்மார் கோஷ்டியினர், தங்கள் திசைக்கு ஈர்க்க, இந்த இருவேறு குழுவினர்தம் எதிர்எதிர்த் தாக்குதலால், தலைவேறு கால்வேறாக ஆகி, துண்டுதுண்டாகச் சிதறிக் கிடக்கிறது மத்திய மாகாண காங்கிரசின் உடல்!

*　　*　　*

பீரார் மாகாண காங்கிரஸ் கதையோ கதைகளிலெல்லாம் மிகவும் கோரமான கதை! காங்கிரஸ் கட்சி எனக்குத்தான் சொந்தம் என்கிறார் ஸ்ரீமான் பஞ்சாபராவ் தேஷ்முக்! "இல்லை—இல்லை — அது என் வீட்டுத் தோட்டத்தில் பழுத்த பலா—நீயார் அதை அபகரித்துச் செல்ல! — கிட்டே

(3-ம் பக்கம் பார்க்க)

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

திராவிட முன்னேற்றக் கழக வீர இளைஞர்களாகிய இவர்கள், வெஞ்சிறையினின்று விடுதலையான அதே நேரத்தில், திராவிடக் கழகக் கோட்டத்திலிருந்து வடநாட்டுச் சுரண்டல் எதிர்ப்பு மறியல் காரணமாக உள்ளே சென்றிருந்த ஒரு திராவிடக் குடும்பமும் வெளியே வந்தது. அவர்கள் வேறு கட்சியினராயிற்றே என்ற எண்ணம் ஒரு துளியும் கொள்ளாமல், அவர்கள் ஆற்றிவரும் அரும்பணி நம் பணிதானே—நம் அருமை சகோதரர்கள்தானே அவர்கள்—முகாம்தான் வேறு வேறு, ஆனால் இலட்சிய கீதம் ஒன்றுதானே என்ற பெருந்தன்மைப் பண்பு கொண்டு, சென்றிருந்த திராவிட முன்னேற்றக் கழகப் பொது மக்கள் அனைவரும், அவர்களையும் அன்புடன் வரவேற்று, மலர்மாலை சூட்டி, மகத்தான பாராட்டுதலைத் தெரிவித்து, வாழிய நீவிர் நீடூழி என்ற இன்ப ஒலியை எழுப்பினர்.

முன்னேற்றக் கழக முரசொலிகள் அனைவரும் விடுதலையாவதற்கு முன்னால், சிறைச்சாலைக்குள், அவர்கள் பெயரை விடுதலையாவோர் பட்டியலில் பொறித்துக் கொள்ளும்போது, சிறை வார்டன், நீங்கள் என்ன சாதி என்று கேட்டதற்கு, அவர்கள் 'திராவிடர்கள்' என்று கூறினராம். அதற்கு சிறை வார்டன், "திராவிடர்" என்ற பெயரை இப் பட்டியலில் பொறிக்கக்கூடாது என்பது மேலதிகாரிகள் எங்களுக்கு இட்டுள்ள கட்டளை, எனவே அதனைப் பொறித்தல் இயலாது" என்று வீண் வாதம் புரிந்தாராம். "அப்படி ஒரு கட்டளை இருப்பதாகத் தெரியவில்லையே—இதோ செல்கிறோம் சிறைச்சாலை சூப்ரண்டிடம் — கேட்டுவிட்டு வருகிறோம் அவரை இப்படியும் ஓர் அக்கிரமம் இருக்கிறதா என்று?" என்று நம் இளைஞர்கள் அனைவரும் ஒரே முகமாக ஆட்சேபக் குரல் எழுப்பிய பிறகுதான், சிறை அதிகாரி, திராவிடர் என்ற பெயரின்கீழ் அவர்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டாராம்.

பதிவு செய்துகொண்ட பிறகு கேட்டாராம் சிறை அதிகாரி திராவிடர் என்றால் என்ன என்று! அதற்கு நம் அறப்போர் வீரர்கள், சமதியக்க பால பாடத்தை அவருக்கு விளக்கமாக எடுத்துரைத்து அந்த இடத்தையே ஒரு சிறு பொதுக்கூட்டமாக ஆக்கிவிட்டனராம்.

இந்த இன்பச் செதியை அந்த இளைஞரேறுகள் தெரிவித்தபோது வெளியே இருந்த மக்கள், மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு, வாழிய திராவிட இன எழுச்சி முழக்கம் என்ற இருதயகீதத்தை எழுப்பிடலாயினர்.

தோழர்கள் 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன், சென்னை மாவட்டத் தி. மு. க. செயலாளர் கே. கோவிந்தசாமி, டாக்டர் கணேசன், சென்னை மாவட்டத் தி. மு. க. துணைச் செயலாளர் கே. எம். கண்ணபிரான், மாணவத் தோழர் கண்ணன், சூளை சண்முகம்—சிட்டிபாபு, காஞ்சிபுரம் ஆர். கே. மூர்த்தி—வி. சம்பந்தன் முதலானவர்கள், விடுதலை வீரர்களை வரவேற்க வந்திருந்த பெருங்கூட்டத்தில் மகிழ்ச்சியுடன் கலந்துகொண்டு தங்கள் நற்பணியை ஆற்றிய சிலராவர்.

இராயபுரம் முன்னேற்றக் கழகத் தோழர்கள், சிறை சென்று மீண்டவர்களில் தோழர்கள் கே. டி. எஸ். மணி, வி, பரமசிவம் நா. து. மகாதேவன் ஆகியோருக்கு தோழர் பி. சிவசங்கரன் அவர்கள் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டமும் சிற்றுண்டி விருந்தும் நடத்தி, தங்கள் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டனர். 18—11—50 மாலை 5-30 மணி அளவில் நடைபெற்ற இப் பாராட்டுக் கூட்டத்தில் தோழியர் சத்தியவாணிமுத்து, தோழர்கள் பெருமாள், எம். எஸ். சிவா, ஆகியோர் கலந்துகொண்டு சிறை மீண்ட வீரர்களைப் பாராட்டிச் சொற்பொழிவாற்றினர். இறுதியில், விடுதலையான இளைஞர்கள் மூவரும், சிறைச்சாலைக் கொடுமைகள் குறித்து விளக்கமாக எடுத்துப் பேசி, தங்கட்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கும் பாராட்டுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். தோழர் கே. இ. சம்பந்தன் அவர்களின் முயற்சியால் நடைபெற்ற இக்கூட்டம் இரவு 8-30 மணிக்கு முடிவுற்றது.

புதிய புத்தகம் வெளிவந்துவிட்டது!!

"போர்வாள்" ஆசிரியர்

மா. இளஞ்செழியன் B. A. Hons.

இயற்றிய

சரிந்த சாம்ராஜ்யம்!

அருமையான கருத்துக்களை இனிமையான தமிழில்தரும் சரிதம் தழுவிய சிந்தனை ஓவியம்.

★ மராட்டிய மண்டலம் ஆரிய மாயையால் ஆட்டிப் படைக்கப்பட்ட அக்கிரமத்தை விளக்கிக் கூறும் அழகிய நூல்.

சிறந்த வாளாயுதம் வெறும் புல்லாயுதத்திற்குப் பணிந்துவிட்டது—அது எப்படி?

மாவீரன் சிவாஜியை ஒரு மதகுரு, தன் மனம்போன வண்ணம் நடக்கவைத்தான்—அது எவ்வாறு?

வீரம் தாழ்ந்தது : வஞ்சகம் வென்றது—அது ஏன்?

இந்தக் கேள்விகட்கு ஒரு பதில், "சரிந்த சாம்ராஜ்யம்"!

விலை அணு 0 10 0 தபாலில் 0 12 0

வணிகர்க்குத் தக்க கழிவுண்டு.

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு :: சென்னை 1.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டங்கள்

நடக்க இருப்பவை

★

25-11-50 சனிக்கிழமை

குருராயப்பேட்டை: மாலை 6 மணி. தலைவர்: குட்டி சிதம்பரனார். பேச்சாளர்: மா. இளஞ்செழியன் B. A. Hons

திருத்தணி (சித்தூர் மாவட்டம்):—மாலை 6 மணி. பேச்சாளர்கள்:—ஈ. வெ. கி. சம்பத், புலவர் மா. நன்னன்

26-11-50 ஞாயிற்றுக்கிழமை

இடைக்காட்டூர்.—மாலை 6 மணி. தலைவர்: க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ. பி. எல். பேச்சாளர்கள்:—இரா நெடுஞ்செழியன் எம். ஏ. அருப்புக்கோட்டை எம். எஸ். இராமசாமி, மதுரை அய்யாசாமி

காஞ்சிபுரம்: இடம்:—புதுப்பாளையத் தெரு, பிள்ளையார் பாளையம். மாலை 6 மணி. பேச்சாளர்கள்:—என். வி. நடராசன், சி. வி. எம். அண்ணாமலை, குடந்தை எஸ். கே. சாமி

27-11-50 திங்கட் கிழமை

நாரணமங்கலம்:—மாலை 5 மணி. பேச்சாளர்கள்:—இரா. நெடுஞ்செழியன் எம் ஏ. எஸ் நெடுமாறன்

3-12-50 ஞாயிற்றுக்கிழமை

நாரணபுரம் [நெல்லை மாவட்டம்] மாலை 6 மணி. பேச்சாளர்கள்:—எம். எஸ். இராமசாமி, இரா. சு. தங்கப்பழம், டி. ஆர். சுப்ரமண்யம், ஆ. திராவிடமணி

4-12-50 திங்கட் கிழமை

சங்கர நயினர் கோயில் [மாணவர் கிளை]:—மாலை 6 மணி. பேச்சாளர்கள்:—எம். எஸ். இராமசாமி, இரா. சு. தங்கப்பழம், டி. ஆர். சுப்ரமண்யம், ஆ. திராவிடமணி

8-12-50 வெள்ளிக் கிழமை

அய்யம்பேட்டை (காஞ்சி):—சி. என். அண்ணாதுரை, காஞ்சி கல்யாணசுந்தரம்.

திருடர்கள் இராஜ்யம்

ஆசிரியர்: **தில்லை—வில்லாளன்**

"திருடர்கள் இராஜ்யம்" எதிர்கால கனவுலகம்! வாழ்வில் எல்லோரும் சமத்வமாக வாழவேண்டுமென்கிற பேரவா! இதுவே எதிரொலிக்கிறது "திருடர்கள் இராஜ்யத்தில்!"

திருடர்கள் இராஜ்யத்தை திருந்திய இராஜ்யமாக மாற்றி பகுத்தறிவு இராஜ்யத்துடன் இணைக்கப்படுவதுடன்; ஒரு உன்னதமான சொர்க்க பூமியாக்கி விடுகிறான் ஒரு இளைஞன்.

இன்னும், சுவைமிகுந்த பகுதிகளை இணைத்திருப்பதுடன், சிந்தனைக்கு விருந்தூட்டும்படி அமையப்பெற்ற ஒரு பொற்குவியல்!

அழகிய மூவர்ண அட்டை — விலை விபரம் பிறகு!

கிடைக்குமிடம்:

திராவிடன் பதிப்பகம்

P. B. நெ. 18, வேலூர் N. A.

மதுரையில்,

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,
அறிஞர் அண்ணாத்துரை,
மு. வரதராசன்,
ம. பொ. சிவஞானம்,
வெ. சாமிநாத சர்மா,
ரா. பி. சேதுப்பிள்ளை,
கி. ஆ. பெ. விசுவநாதம்,
மு. கருணாநிதி,
இரா. நெடுஞ்செழியன்,
இராதா மணாளன்
முதலியோர்கள் எழுதிய புத்தகங்களும், மாஸ்கோ பதிப்புகளும் (Peoples Publishing House) மற்றும் எல்லா தமிழ் புத்தகங்களும் கிடைக்கும்.

பாரதி புத்தக நிலையம்

வக்கீல் புதுத்தெரு மதுரை.

Edited, Printed and published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hon)